# ஸ்ரீ சத்ய ஸாயி விரத பூஜை

## பகுதி ஒன்று - முன்னுரை




ஏறக்குறைய எல்லா இந்திய மக்களுக்கும் சத்திய நாராயண பூஜை பற்றியும், விரதத்தின் முக்கியத்துவமும், அதை செய்வதால் ஏற்படும் நலன்கள் பற்றியும் தெரிந்திருக்கும். பகவானின் தாயார் ஈஸ்வரம்மா சத்ய நாராயண பூஜை செய்த பிறகு தான் பாபா பிறந்தார். அதனால் தான் சத்ய நாராயணன் என்ற பெயர் கொடுக்கப் பட்டது. இந்த பூஜை செய்வதற்கும், கணேஷ பூஜையும் மற்ற எல்லா கடவுளுக்கும் பூஜை செய்வதற்கும் சில தனிப்பட்ட விதிமுறைகள் இருக்கின்றன. இரண்டு அவதாரங்களையும் (ஷிர்டி, பர்த்தி) தரிசனம் செய்வதற்கு புண்ணியம் செய்திருக்க வேண்டும். அத்தகைய புண்ணியவதி மாதா பெத்த பொட்டு (பெத்த பொட்டு அம்மா). விரத பூஜையின் விதி முறைகளை எழுதினார்.

## பகவானின் பாதங்களில்

பகவான் சாயியின் அவதாரத்தை வரவேற்க ஆயிரம் வழிகள் இருக்கின்றன. பகவானின் லீலைகளும், அன்பையும் புகழ்ந்து பேச பாடல்களும், ஸ்லோகங்களும் உள்ளன. சாயி கீதாவை புகழ்ந்து வரவேற்க பிரார்த்தனைகளும், பூஜைகளும் இருக்கின்றன. மேலும், இந்த வழிகளில் அவர் ஆசீர்வாதங்களையும் பெறலாம். அது மாதிரியான ஒரு பூஜை "சத்ய ஸாயி விரத பூஜை" ஆகும்.

ஸ்ரீமதி ஜி. சாரதா தேவி (அன்பாக பெத்த பொட்டு என்று அழைப்பார்கள்) மிகவும் ஆர்வம் கொண்ட ஒரு உயர்ந்த ஆத்மா. ஸ்ரீ சத்ய ஸாயி விரத கல்பம் என ஒரு புத்தகம் எழுதினார். அதில் பூஜையின் விதி முறைகளும், பாபாவின் ஐந்து கதைகளும் உள்ளன.



பகவான் ஸாயி புத்தகத்தை எளிய முறையில் எழுதினால் எல்லா பக்தர்களுக்கும் நன்றாகப் புரியும் எனக் கூறியதாகக் எழுத்தாளர் சொல்கிறார். பெத்த பொட்டு அம்மா விரத பூஜை விதி முறைகளை எழுதிய பிறகு பகவானிடம் சொல்லவில்லை. பகவான் ஒரு நாள் இந்த விவரங்களைப் பார்த்து திருத்தங்கள் செய்தார். அவருக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. பகவான் இந்த பூஜை செய்பவர்களுக்கு மன நிறைவு கொடுத்து, எல்லா சமயங்களிலும் அன்புடன் காப்பாற்றுவதாக உறுதியளித்தார். பக்தர்கள் அனைவரும் இந்த பூஜையை விதிமுறைப்படி ஆழ்ந்த பக்தியுடன் செய்தால் அவர்கள் ஸ்வாமியின் அருளைப் பெறுவார்கள்.

ஸ்ரீ எம். எஸ், பி. பிரசாத் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவர் பகவானின் தீவிர பக்தர், ஸாயி பங்காரு மையம், நியூ டெல்லியை சேர்ந்தவர்.

# முக்கியத்துவம், முன்னேற்பாடு, பூஜைக்கு வேண்டிய பொருட்கள்

**பகுதி இரண்டு**



பக்தர்கள் ஏன் இந்த விரதத்தை பின்பற்ற வேண்டும் - அதன் முக்கியத்துவம்:

விரதம் என்றால் ஒரு புனிதமான சடங்குமுறை. கல்பம் என்றால் பக்தர்கள் பூஜை செய்யும் போது, படிப்படியாக தொடர வேண்டிய சில குறிப்பிட்ட விதிமுறைகள். இரண்டுமே சமஸ்கிருத வார்த்தைகள் தான்.

பூஜை என்றாலே ஒப்புயர்வற்ற கடவுளுக்குத் தலை வணங்குதல் என்பதாகும். அவரைச் சென்று அடைவதுதான் எல்லா பக்தர்களுக்கும் விருப்பம். இந்த முயற்சியை நோக்கிச் செல்ல, அந்தக் காலத்தில் ஞானிகள் புனிதமான ஆனால் கடுமையான விதிமுறைகளை உருவாக்கினார்கள். அதைக் கடைப்பிடிக்க முடியாவிடில் சில எளிமையான விதிமுறைகளும் இருக்கின்றன. அதில் ஒன்று தான் விரதம்.

இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் சத்ய நாராயணப் பூஜையைக் கடைப்பிடிக்கிறார்கள். இந்த விரதம் செய்வதற்கு முக்கிய காரணமானது என்னவென்றால் பக்தர்கள் கேட்கும் அனைத்து வரங்களையும் கடவுள் பூர்த்தி செய்து வருவார் என்பதுதான் ஐதீகம்.

ஸ்ரீ சத்ய சாயி விரத கல்பம் என்ற பூஜையும் அதே மாதிரிதான். அவர் பிறந்த பொழுது சத்ய நாராயணா என்ற பெயர் சூட்டப்பட்டது. பெயருக்கு ஏற்ப, பக்தர்களை எல்லா சமயங்களிலும் காப்பார் என்பதுதான் அர்த்தம்.

**பக்தர்களுக்கு சில விதிமுறைகள்:**

- பூஜையை நடத்தத் தேர்ந்தெடுக்கும் இடம் சுத்தமாக இருக்க வேண்டும்.
- நான்கு ஓரங்களிலும், நடுவிலும், கோல மாவில் தாமரை வடிவங்கள் செய்ய வேண்டும்.
- மண்டபம் (மரத்தால் இயன்ற வரைச்சட்டம்) அமைக்க வேண்டும். மண்டபத்தின் நான்கு ஓரங்களிலும் வாழை மரம் கட்ட வேண்டும்.
- மண்டபத்தின் நடுவில் பூஜை செய்யும் இடத்தில் மரப்பலகை (பீடம்) ஒன்றை சுத்தமாக அலம்பி, துடைத்து வைக்க வேண்டும்.

- புதிய துணி ஒன்றை மடித்து பீடத்தின் மேல் வைக்க வேண்டும்.
- துணியின் மேல் ஐந்து ஆழாக்கு அரிசியைப் பரப்ப வேண்டும்.
- அரிசிக்கு நடுவில் "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தை விரலால் எழுத வேண்டும்.
- பூஜை மண்டபத்தின் பின்புறம், பூவும் பொட்டும் வைத்து அலங்கரித்த பகவானின் படம் ஒன்றை வைக்க வேண்டும்.
- உலோகத்தால் செய்த வட்டமான பாத்திரம் (ஒரு பெரிய குவளை) ஒன்றை சுத்தப்படுத்தி வைக்க வேண்டும். மஞ்சள் பொடியை நன்றாக குழைத்து பாத்திரத்தின் வெளிப்புறத்தில் தடவ வேண்டும். நான்கு திசைகளிலும் குங்கும பொட்டு இட வேண்டும். பாத்திரத்தில் பாதி அளவுக்கு தண்ணீரை நிரப்ப வேண்டும். அதில் ஐந்து துண்டுகள் பேரிச்சம் பழம், காய்ந்த திராட்சை, பாதாம், முந்திரிப்பருப்பு, மேலும் கற்கண்டு அதில் போட வேண்டும். ஒரு சிட்டிகை மஞ்சள் பொடி, சந்தனம், அக்ஷதையும் பாத்திரத்தில் போட வேண்டும். ஐந்து வகைச் செடிகளின் இலைக்கொத்துகளைப் பாத்திரத்தில் அடுக்க வேண்டும். மாவிலை, ஆலிலை, அரச இலை, வில்வ இலை, பருத்தி இலையாக இருக்கலாம்.
- புதிய ரவிக்கைத் துண்டை மடித்து குழிவு வடிவத்தில் இலைக்கொத்துகளுக்கு நடுவில் வைக்க வேண்டும். குறுகிய பக்கம் பாத்திரத்திற்குள் இருக்க வேண்டும். அகன்ற பக்கம் மேல் நோக்கி இருக்க வேண்டும்.
- குழிவு வடிவில் மடித்த ரவிக்கைத் துண்டை சுற்றி பூச்சரம் வைக்க வேண்டும்.
- குடுமியுடன் உள்ள ஒரு உரித்த தேங்காய்க்கு மஞ்சள் தடவி குங்குமப் பொட்டு வைக்க வேண்டும். குடுமியைச் சுற்றி ஒரு பூச்சரமும், பாத்திரத்தின் விளிம்பை சுற்றி ஒரு பூமாலையும் வைக்க வேண்டும். அலங்கரித்த தேங்காயை கோணம் போல் மடித்திருக்கும் ரவிக்கைத் துண்டுக்குள் வைக்க வேண்டும்.

- அலங்காரத்திற்கு பிறகு, பாத்திரம் தெய்வத்தின் உடம்பு மாதிரியும், தேங்காய் தெய்வத்தின் தலை மாதிரியும், ரவிக்கைத் துண்டு மேல் வஸ்த்ரம் போலும், பொட்டு, மஞ்சள், மாலைகள் எல்லாம் ஒரு அழகான அலங்காரம் போல் இருக்கும்.
- இது தான் கலசம். அழகான கலசத்தைப் பீடத்திற்கு மேல், ஸாயின் படத்திற்கு முன் வைக்க வேண்டும்.
- பரப்பிய அரிசிக்கு நடுவில் எழுதியிருக்கும் "ஓம்" என்ற பிரணவ மந்திரத்திற்கு மேல் பெரிய வெற்றிலையை வைத்து அதற்கு மேல் பாபாவின் விக்ரஹத்தை வைக்க வேண்டும். அதற்கு முன் பக்கம், ஒரு வெற்றிலையை வைத்து, அதற்கு மேல் மஞ்சளைத் தண்ணீரில் குழைத்த கணபதி உருவம் பண்ணி வைக்க வேண்டும்.
- விரதத்தை ஆரம்பிக்கும் போது, கணபதியை முதலில் வழிபட வேண்டும். அதற்குப் பிறகு தான் பகவான் பாபாவையும் கலசத்திற்கும் பூஜை செய்ய வேண்டும்.

## பூஜைக்கு வேண்டிய சாமான்கள்



- தேங்காய் (8)
- வாழைப்பழம் (8)
- பல வகை பூக்கள்
- பச்சை இலைகள் (வில்வ இலை, துளசி, ஆலிலை, மாவிலை, அரச இலை)
- மஞ்சள் பொடி
- குங்குமம்
- சந்தனம்
- அக்ஷதை
- பூணல்
- வஸ்த்ரம்
- கற்பூரம்
- ஊதுவத்தி
- ஐந்துத் திரிகள் போடுகிற மாதிரி ஒரு விளக்கு
- அதிக திரிகள் (அவசரத்திற்கு)
- வெற்றிலை
- பாக்கு
- பஞ்சாம்ருதம் (பால், தயிர், நெய், தேன், சர்க்கரை அல்லது வெல்லம்)
- வெண்கல மணி (பூஜை ஆரம்பிக்கும் பொழுது)
- எட்டு தேங்காய் இல்லையென்றால் இரண்டு போதுமானது. ஒன்று பூஜை ஆரம்பிக்கும் பொழுது, ஒன்று கடைசியில் வேண்டும். பூஜைக்கு நடுவில் ஒரு பழம் கூட சமர்ப்பிக்கலாம். பூஜை முடிந்த பின் பிரசாதம் கொடுக்க வேண்டும். அலங்காரம் எளிதாகவும் பண்ணலாம். பூஜை பண்ணுகின்றவரின் மனதிற்கு

ஏற்ப பண்ணலாம். திடநம்பிக்கையுடனும், பக்தியுடனும் சமர்ப்பிக்க வேண்டும்.

ப்ரஸாதத்தில் இருக்க வேண்டிய பொருட்கள்

- கோதுமை குருணை (ரவை அல்லது கோதுமை ரவை) - ஐந்து ஆழாக்கு
- சர்க்கரை
- காய்ந்த திராட்சை
- பாதாம், முந்திரி
- நெய்

ஏகாதசி அல்லது பௌர்ணமி அன்று விரதத்தை செய்யலாம்

மத்தியானம் வேளை பிரதோஷம் சமயம் அல்லது காலை பிரம்ம முஹூர்த்தம் சமயம் விரதத்தை ஆரம்பிக்கலாம்.

கோயில் அல்லது புனிதமான இடத்தில் செய்யலாம். ஆற்றங்கரை அல்லது துளசி செடி முன் அல்லது பக்தரின் வீட்டில் கூட செய்யலாம்.

**குறிப்பு:**

ஒவ்வொரு மனிதனும் இந்த பூஜையைச் செய்யலாம். கணவன் - மனைவி, கணவன் இல்லாதவர்கள், மனைவி இல்லாதவர்கள், வயதானவர்கள், கல்யாணம் ஆகாத பெண்கள், ஆண்கள் பூஜையைச் செய்து கடவுளின் அருளைப் பெறலாம்.

http://in.groups.yahoo.com/group/saidevotees_worldnet9/

பக்திதான் முக்கியம். சில சாமான்கள் இல்லையென்றால் ஆழ்ந்த பக்தியுடன் இருப்பதை வைத்துச் செய்யலாம். பாபாவிற்குத் தூய்மையான உள்ளம் தான் முக்கியம்.

# சத்ய சாயி விரத பூஜை - பாகம் 3A

## குரு, கணபதி பூஜையின் விதிமுறைகள்

**பூஜையின் ப்ராரம்பம் (தொடக்கம்)**

**குரு பிரார்த்தனை**



பக்தர்கள் ஒரு பஞ்ச பாத்திரத்தில் நீரும் உத்தரணியும் வைத்துக் கொள்ள வேண்டும். அத்தோடு ஒரு சிறிய தாம்பாளமும் இருக்க வேண்டும். பூஜை நடந்து கொண்டிருக்கும் போது இந்தத் தாம்பாளத்தில் உத்தரணியால் நீரை விட பயன்படும். பூஜை ஆரம்பிக்கும் போது கை கூப்பி நமஸ்காரம் செய்ய வேண்டும்.

**ஸ்ரீ குருப்யோ நம: ஹரி: ஓம்**

**குரவே சர்வ லோகானாம் பிஷஜே பவ ரோகினாம்**

**நிதயே சர்வ வித்யானாம் தக்ஷிணாமூர்த்தயே நம:**

**ஆகமார்தந்து தேவானாம், கமனார்தந்து ராக்ஷசாம், குரு கண்டாரவம்**

**தத்ர, தேவதா ஆஹ்வான லாஞ்சனம், கண்டா த்வனிம் க்ருத்வா**

(மணியை அடிக்க வேண்டும்)

**பூதோ ச்சாடனம் க்ருத்வா ஆசம்ய**

ஒவ்வொரு தடவையும் ஒரு உத்தரணி அளவு தண்ணீரை வலது உள்ளங்கையில் ஊற்றி, உறிஞ்சி குடிப்பதற்கு முன் மஹா விஷ்ணுவின் மூன்று பெயர்களைச் சொல்ல வேண்டும்

**கேசவாய நம: (தண்ணீரை உறிஞ்சிய பின்)**

**நாராயணாய ஸ்வாஹா (தண்ணீரை உறிஞ்சிய பின்)**

**மாதவாய ஸ்வாஹா (தண்ணீரை உறிஞ்சிய பின்)**

நமஸ்காரம் பண்ணி கொண்டு மகா விஷ்ணுவின் கீழ் வரும் நாமங்களைச் சொல்ல வேண்டும்.

**கோவிந்தாய நம:**

**விஷ்ணவே நம:**

**மதுசூதனாய நம:**

**த்ரிவிக்ரமாய நம:**

**வாமனாய நம:**

**ஸ்ரீதராய நம:**

**ரிஷிகேசாய நம:**

**பத்மநாபாய நம:**

**தாமோதராய நம:**

**ஷங்கர்ஷனாய நம:**

**வாசுதேவாய நம:**

ப்ரத்யும்னாய நம:

அனிருத்தாய நம:

புருஷோத்தமாய நம:

அதோக்ஷஜாய நம:

நாரசிம்ஹாய நம:

ஜனார்தனாய நம:

உபேந்த்ராய நம:

ஹரயே நம:

ஸ்ரீ கிருஷ்ணாய நம:

உத்திஷ்தந்து பூத பிஷாசாஹ், இதே பூமி பாரகாஹ், இதேஷாம் அவிரோதேன, ப்ரஹ்ம கர்ம சமாரபே

ப்ராணாயாமம்:

ஓம் பூ: ஓம் புவ: ஓம் ஸுவ: ஓம் மஹ: ஓம் ஜன: ஓம் தப: ஓம் ஸத்யம் ஓம் தத்ஸ விதுர்வரேண்யம் பர்கோ - தேவ ஸ்யதீமஹி ! தி யோ யோ ந ; பிரசோதயாத்

ஓம் ஆபோ ஜ்யோதீ ரஸ அம்ருதம் ப்ரம்ம பூர்ப்புவஸ்ஸுவரோம்;

மமோபாத்த - துரிதக்ஷய த்வாரா, ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம், சுபே, ஷோபனே, முஹுர்த்தே, ஸ்ரீ மகா விஷ்ணு ராக்ஞ்யயா, ப்ரவர்த்த மானச்ய, அத்ய ப்ரஹ்மணா, த்விதீய பரார்த்தே, ஷ்வேத வராஹ கல்பே, வைவஸ்வத மன்வந்தரே, கலியுகே, ப்ரதமே பாதே (ஜம்பூ த்வீபே, பாரத வர்ஷே, பரத கண்டே, அஸ்மின், வர்தமானே, வ்யாவஹாரிகே, சாந்த்ர மானேன ........ஸம்வத்சரே .........ஆயனே .........மாசே ..........பக்ஷே ...........திதௌ, .......வாசரே .......சுப

**நக்ஷத்ரே, சுப கரணே, ஏவம் குண விசேஷேண, விசிஷ்டாயாம், சுப திதௌ.....கோத்ர: .......)**

வெளிநாட்டில் இருப்பவர்கள் வளைவுக்குள் இருப்பதை விட்டு விடலாம்.

**ஶ்ரீமான்/ ஶ்ரீமதி.....(பக்தர்களின் பெயர்களை சொல்ல வேண்டும்)**

**நாமதேய, தர்ம பத்தினி ஸமேதச்ய (தம்பதிகளாக பூஜை செய்தால் மட்டுமே)**

**மம ஸஹ குடும்பானாம் - க்ஷேம - ஸ்தைர்ய - விஜய - அபய, ஆயுராரோக்ய - ஐஸ்வர்ய - அபிவ்ருத்யர்தம், தர்ம அர்த்த காம மோக்ஷ சதுர்வித புருஷார்த்த பல(phala) வாப்த்யர்த்தம், சிந்தித மனோரத சித்யர்த்தம், சர்வ தேவதாதீத ஸ்வரூப, சர்வ மந்திர ஸ்வரூப, சத்ய சாயி தேவதாம், உத்திஷ்ய, ஶ்ரீ சத்ய சாயி தேவதா ப்ரீத்யர்த்தம், த்யான, ஆவாஹனாதி ஷோடஷோபசார பூஜாம் கரிஷ்யே.**

**கலசாராதனம்:**

**ததங்க கலசாராதனம் கரிஷ்யே**

ஒரு பஞ்ச பாத்திரத்தில் நீர் நிரப்பி உத்தரணியை வைக்கவும். பாத்திரத்தின் வெளியில் சந்தனமும், மஞ்சளும் குழைத்துத் தடவ வேண்டும். குங்குமப் பொட்டும் வைக்க வேண்டும். ஒரு புஷ்பமும் அக்ஷதையும் பாத்திரத்தில் போட வேண்டும். இதற்குக் கலசம் என்று பெயர்; பூஜைக்குப் பயன்படுத்தலாம்.

இப்பொழுது கலசத்தின் வாயைத் தன் உள்ளங்கையால் மூடி, பின் வருவதைச் சொல்ல வேண்டும்.

**கலஷச்ய முகே விஷ்ணு, கந்தே ருத்ர சமாஸ்ரிதஹ, மூலே தத்ர ஸ்திதோ ப்ரஹம, மத்யே மாத்ருகணா ஸ்ம்ருதஹ, குக்ஷௌது சாகரா சர்வே சப்தத்வீபா வசுந்தரா , ரிக்வேதோ அத யஜுர் வேத**

**சாம வேதோ அதர்வணஹ, அங்கைஷ்ச்ச சஹிதா: சர்வே கலஸந்து சமாஸ்ரிதஹ, கங்கே ச, யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி, நர்மதே சிந்து காவேரி ஜலேச்மின் சந்நிதிம் குரு, கலசோதகேன தேவம் ஆத்மானம் பூஜா த்ரவ்யாணி சம்ப்ரோக்க்ஷய.**

(கலசத்திலிருந்து தண்ணீரை மெதுவாக பூவால் பூஜை சாமான்கள், தெய்வத்தின் மேல், பிறகு பக்தரின் தலை மேல் தெளித்துக் கொள்ள வேண்டும்).

**அத சத்ய சாயி விரத ஸாங்கதா ஸித்யர்த்தம், நிர்விக்னேன பரிஸமாப்த்யர்த்தம் ஸ்ரீ மஹா கணபதி பூஜாம் கரிஷ்யே.**

**அத கணபதி பூஜை:**

**அத கணாதிபதயே நமஹ, த்யாயாமி, ஆவாஹயாமி.**

(பக்தரின் பூஜை தட்டில் ஒவ்வொரு தடவை சமர்ப்பயாமி சொல்லும் போதும் ஒரு சிறிய உத்தரணி தண்ணீரை விட வேண்டும்)

**நவ ரத்ன சிம்ஹாசனம் ஸமர்ப்பயாமி**

**பாதயோஹோ பாத்யம் ஸமர்ப்பயாமி**

**ஹஸ்தயோஹோ அர்க்ஹ்யம் ஸமர்ப்பயாமி**

**முகே ஆசமனீயம் ஸமர்ப்பயாமி**

**ஸ்ரீ மஹா கணாதிபதயே நமஹ, ஸ்நானம் ஸமர்ப்பயாமி,**

**ஸ்ரீ மஹா கணாதிபதயே நமஹ ஸ்நாநாநந்தரம் ஸுத்த ஆசமனீயம் ஸமர்ப்பயாமி**

**ஸ்ரீ மஹா கணபதயே நமஹ ஸ்நாநாநந்தரம் வஸ்த்ர யுக்மம் ஸமர்ப்பயாமி**

(புதிய ஆடைகள் ஒரு ஜோடி அல்லது பஞ்சை கொஞ்சம் நனைத்துத் தட்டையாகச் செய்து வைக்கவும்)

**ஸ்ரீ மஹா கணபதயே நமஹ யஞ்யோபவீதம் ஸமர்ப்பயாமி**

(புனிதமான நூல் அல்லது பூணூல் செய்து வைக்க வேண்டும்)

**ஸ்ரீ மஹா கணபதயே நமஹ ஸ்ரீகந்தம் ஸமர்ப்பயாமி** (சந்தனம்)

**ஸ்ரீ மஹா கணபதயே நமஹ அலங்கரணார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி** (அட்சதை)

**ஸ்ரீ மஹா கணபதயே நமஹ தூர்வாதி நானாவித பரிமள புஷ்பாணி**

**ஸமர்ப்பயாமி** (புஷ்பங்கள்)

கீழ்கண்ட வரிகளில் ஒவ்வொரு வரி முடிவிலும் நமஹ சொல்லும் போது ஒரு மலரை மஹா கணபதியின் பாதங்களில் வைக்க வேண்டும்.

**ஓம் சுமுகாய நமஹ**

**ஓம் ஏகதந்தாய நமஹ**

**ஓம் கபிலாய நமஹ**

**ஓம் கஜ கர்ணகாய நமஹ**

**ஓம் லம்போதராய நமஹ**

**ஓம் விகடாய நமஹ**

**ஓம் விக்னராஜாய நமஹ**

**ஓம் கணாதிபாய நமஹ**

**ஓம் தூமகேதவே நமஹ**

**ஓம் கணாத்யக்ஷாய நமஹ**

**ஓம் பாலச்சந்த்ராய நமஹ**

**ஓம் கஜாநநாய நமஹ**

**ஓம் வக்ரதுண்டாய நமஹ**

**ஓம் சூர்ப்பகர்ணாய நமஹ**

**ஓம் ஹேரம்பாய நமஹ**

**ஓம் ஸ்கந்த பூர்வஜாய நமஹ**

**ஓம் ஸ்ரீ மஹா கணபதயே நமஹ**

**நாநா வித பரிமள புஷ்ப அக்ஷதான்** ஸமர்ப்பயாமி (பூவும் அட்சதையும்)

**தூபம் ஆக்ரபயாமி** (ஊதுவத்தி)

**தீபம் தர்ஷயாமி** (ஏற்றின விளக்கு)

**தூப தீபாநன்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி**

**(ஒரு உத்தரணி தண்ணீரை கலசத்திலிருந்து தட்டில் விட வேண்டும்)**

**நைவேத்யம்** - ப்ரஸாதத்தை ஸமர்ப்பணம் செய்ய வேண்டும். ஒரு துண்டு வெல்லம் வைக்க வேண்டும்.

**ஓம் பூர் புவ: ஸுவ:**

**தத் சவிதுர் வரேண்யம்**

**பர்கோ தேவஸ்ய தீமஹி**

**தியோ யோன: ப்ரசோதயாத்**

**தேவ சவித: ப்ரஸுவ**

கலஸத்திலிருந்து கொஞ்சம் தண்ணீரைப் பூவினால் நைவேத்ய ப்ரஸாதம் மேல் தெளிக்க வேண்டும்.

**சத்யம் த்வர்தேந பரிஷிஞ்சாமி, அம்ருதமஸ்து, அம்ருதோபஸ் தரணமஸி, ஸ்ரீ மஹா கணபதயே நமஹ குடோபஹார நைவேத்யம் ஸமர்ப்பயாமி**

(பக்தர் மெதுவாக உள்ளங்கையை அசைத்து ஸ்வாமிக்கு நைவேத்யம் கொடுப்பது சாஸ்திரம் ஆகும்)

**ஓம் ப்ராணாய ஸ்வாஹா**

**ஓம் அபானாய ஸ்வாஹா**

**ஓம் வ்யாநாய ஸ்வாஹா**

**ஓம் உதானாய ஸ்வாஹா**

**ஓம் ஸமானாய ஸ்வாஹா**

**ஓம் ப்ரஹமனே ஸ்வாஹா**

{கீழ்க்கண்ட ஒவ்வொரு வரிக்குப் பிறகும் ஒரு சிறிய உத்தரணி தண்ணீரை தட்டில் விட வேண்டும்}

**மத்யே மத்யே பானீயம் ஸமர்ப்பயாமி**

**அம்ருதாபிதாநமஸி, உத்தர ஆபோஷனம் ஸமர்ப்பயாமி, மஹா கணபதயே நமஹ, ஹஸ்தௌ ப்ரக்ஷாலயாமி, பாதௌ ப்ரக்ஷாலயாமி, சுத்த ஆசமனீயம் ஸமர்ப்பயாமி**

**மஹா கணபதயே நமஹ**

**சதக்ஷிண தாம்பூலம் ஸமர்ப்பயாமி**

வெற்றிலை, பாக்குடன் ஒரு காசு வைக்கவும்.

**மஹா கணபதயே நமஹ**

**ஸ்வர்ண மந்த்ர புஷ்பம் ஸமர்ப்பயாமி**

(புஷ்பங்களைத் தட்டில் வைக்கவும்)



**ஸ்ரீ மஹா கணபதயே நமஹ**

**ஆத்ம ப்ரதக்ஷிண நமஸ்காரம் ஸமர்ப்பயாமி**

பக்தர் நின்று நமஸ்காரம் செய்துக் கொண்டு தன்னையே மூன்று தடவை சுற்ற வேண்டும். பிறகு உட்கார்ந்துக் கொண்டு பூஜையை தொடர வேண்டும்.

**யஸ்ய ஸ்ம்ருத் யாச நாமோக்த்யா தபஹ பூஜா க்ரியாதிஷூ, ந்யூனம் ஸம்பூர்ணதாம் யாதி சத்யோ வந்தே கணாதிபா. மந்த்ர ஹீனம் க்ரியா ஹீனம் பக்தி ஹீனம் கணாதிபா, யத் பூஜிதம் மயா தேவ பரிபூர்ணம்  ததாஸ்து தே.**

ஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்ய வேண்டும்.

**அனயா த்யான ஆவாஹனாதி ஷோடசோபசார, பூஜாயாம் ச, பகவான் சர்வாத்மக மஹா கணபதி சுப்ரீதோ சுப்ரசன்னோ வரதோ பவது, மம இஷ்ட காம்யார்த்த சித்திரஸ்து.**


மறுபடியும் பக்தர் நமஸ்காரம் செய்ய வேண்டும்.

**மஹா கணபதி ப்ரசாதம் ஸிரசா தாரயாமி.**

பக்தர் கணபதிக்கு செய்த பூஜையிலிருந்து ஒரு பூவை எடுத்து தன் தலையில் வைத்து கொள்ள வேண்டும்.

# ஸ்ரீ சத்ய சாயி விரத பூஜை - பாகம் 3B

## ஸ்ரீ சத்ய சாயி பூஜை செய்யும் முறை:



அத: ஸ்ரீ சத்ய சாயி பூஜா

அத: ஸர்வ தேவதாதீத ஸ்வரூப, ஸர்வ சக்தி ஸ்வரூப, ஸர்வ மந்த்ர ஸ்வரூப, ஸ்ரீ சத்ய சாயி தேவதா பூஜாம் கரிஷ்யே.

மம அகண்ட விக்ஞான விபவ ஆனந்த சித்யார்த்தம், ஸர்வ தேவதாதீத ஸ்வரூப, ஸ்ரீ சத்ய சாயி தேவதா ப்ரீத்யர்த்தம்,

ஷோடசோபசார பூஜாம் - ச - கரிஷ்யே.

ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி ஆவாஹனம் கரிஷ்யே. ஆகச்ச பகவான் தேவஸ்தானே - சத்ர ஸ்திரோ பவ, யாவத் பூஜாம் கரிஷ்யேஹம் - தாவத்வம் ஸன்னிதௌ வஸ

ஓம் ஸ்ரீ ஸர்வ தேவதாதீத ஸ்வரூப, ஸர்வ சக்தி ஸ்வரூப, ஸர்வ மந்த்ர ஸ்வரூப, ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ ஆவாஹயாமி. புஷ்ப அக்ஷதான் க்ருஹீவ.

பக்தர் இப்பொழுது சிறிது அக்ஷதை, புஷ்பம் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஸர்வ தேவதைகளிலும் அதிதேவதா ஸ்வரூபமான ஸ்ரீ சத்ய சாயி பகவான் மண்டபத்தில் அமர்ந்து இருப்பதாக பக்தர் உணர வேண்டும். அந்த ஆழ்ந்த

நம்பிக்கையுடன் பக்தி பூர்வமாக பக்தர் பின் வருமாறு த்யானம் செய்ய வேண்டும்.

**த்யானம்:**



**த்யாயேத் ஸத்யம், குணாதீதம், குணத்ரய ஸமன்விதம், லோகநாதம், த்ரிலோகேசம், கௌஸ்துபாபரணம் ஹரிம், நீல வர்ணம், பீத வஸ்த்ரம், ஸ்ரீவத்ச பத பூஷிதம், கோவிந்தம், கோகுலானந்தம், ப்ரஹ்மாத்யைரபி பூஜிதம், ஸாங்க ஸ பரிவார சமேத ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி பர ப்ரஹ்மணே நமஹ த்யானம் ஸமர்ப்பயாமி**

பக்தர்கள் இப்போது கையிலுள்ள அக்ஷதை மற்றும் புஷ்பங்களை ஸ்ரீ சாயி பகவானுக்கு ஆழ்ந்த பக்தி கலந்த மரியாதையுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**நாநா வர்ண ஸமாயுக்தம், பத்ர புஷ்ப ஸுஷோபிதம் ஆசனம், தேவ தேவேச ப்ரீத்யர்த்தம், ப்ரதிக்ருஹ்யதாம், ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ நவரத்ன கசித சிம்ஹாசனம் ஸமர்ப்பயாமி**

(பக்தர் ஒரு உத்தரணி அளவு தண்ணீர் தன் முன் உள்ள தாம்பாளத்தில் விட வேண்டும்)

**சத்ய சாயி நமஸ்தேஸ்து நரகார்ணவ தாரக பாத்யம் க்ருஹாண தேவேச மம ஞானம் விவர்த்தய. ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ பாத்யம் ஸமர்ப்பயாமி.**

(ஒரு உத்தரணி அளவு தண்ணீரை விடவும்)

**அவ்யக்தாவ்யக்த ஸ்வரூபாய ஹ்ருஷீகபதயே நமஹ மயா நிவேதிதோ பக்த்யாஹ் அர்க்யோயம் ப்ரதி க்ருஹ்யதாம். ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ அர்க்யம் ஸமர்ப்பயாமி.**

(ஒரு உத்தரணி அளவு தண்ணீரை விடவும்)

**மந்தாஹினி ஸமம்வாரி, தாப பாப ஹரம் சுபம், தடிதம் கல்பிதம் தேவ ஸம்யக் ஆச்சம்யதாம் த்வயா. ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ ஆசமநீயம் ஸமர்ப்பயாமி.**

(ஒரு உத்தரணி அளவு தண்ணீரை விடவும்)

**ஸ்நானம் பஞ்சாம்ருதைர் தேவ, க்ருஹாண புருஷோத்தமா, அனாதநாத, சர்வஞ்ய கீர்வாண ப்ரணுதப்ரிய. ஸர்வ தேவதாதீத**

**ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ பஞ்சாம்ருத ஸ்நானம் ஸமர்ப்பயாமி.**

(இப்பொழுது பஞ்சாம்ருதங்கள் ஒவ்வொன்றையும் மலரில் தோய்த்து ஸ்ரீ சாயியின் படத்தின் மீதும், சிலையின் மீதும் தெளிக்க வேண்டும். பிறகு சிறிது அளவு தண்ணீராலும், சுத்தமான துணியாலும் தெளித்த திரவ்யங்களை துடைத்து சுத்தமாக வைக்க வேண்டும்)

**வேத ஸூக்த சமாயுக்தே, யக்ஞு ஸாம ஸமன்விதே ,ஸர்வ வர்ண ப்ரதே தேவ வஸனான்ஸி ப்ரதி க்ருஹ்யதாம் ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ வஸ்த்ர யுக்மம் ஸமர்ப்பயாமி.**

(புது வஸ்த்ரங்களின் ஜோடி அல்லது பஞ்சு திரிகளை ஈர மஞ்சளால் துடைத்து வைக்க வேண்டும்)

**ப்ரஹ்மா விஷ்ணு மகேஷைஷ்ச்ச நிர்மிதம், ப்ரஹ்ம ஸூத்ரகம், யக்ஞ்யோபவீதம், தானேன, ப்ரீயதாம் ஹ்ருத்கதேஷ்வர, ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ யக்ஞ்யோபவீதம் ஸமர்ப்பயாமி.**

(பூணல் ஸமர்ப்பிக்க வேண்டும்)

**ஸ்ரீ கந்தம் சந்தனம் திவ்யம், கந்தாத்யாம், ஸுமனோஹரம், விலேபனம் ஸுரஸ்ரேஷ்ட, சந்தனம் ப்ரதி க்ருஹ்யதாம் க்ருஹ்யதாம் ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ கந்தம் ஸமர்ப்பயாமி.**

ஸ்ரீ கந்தான் தாரயாமி.(சந்தன தூள்)

**ஹரித்ரா சூர்ண சம்யுக்தம், குங்குமம் காமதாயகம், நாநா பரிமள திவ்யம், க்ருஹான குண பூஷித - ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ, குங்குமம் ஸமர்ப்பயாமி.**

(மஞ்சள், குங்குமம் ஸமர்ப்பிக்க வேண்டும்)

**அக்ஷதாத் தண்டுலா ஷுப்ரா குங்குமேன விராஜிதா: மயா நிவேதிதா பக்த்யா க்ருஹாண பரம ப்ரபோ - க்ருஹ்யதாம் ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ - அலங்கரணார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி.**

(மஞ்சள் கலந்த அக்ஷதை தூவ வேண்டும்)

**மல்லிகாதி ஸுகந்தீனி, மாலாத்யிதீனி வை ப்ரபோ, மயா ஹ்ருதானி பூஜார்த்தம் புஷ்பாணி ப்ரதி க்ருஹ்யதாம் - ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ - நானாவித பரிமள புஷ்பாணி ஸமர்ப்பயாமி.**

(பலவித நறுமணமுள்ள புஷ்பங்களைத் தூவ வேண்டும்)

**அத அங்க பூஜாம் ச கரிஷ்யே**

(இது பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் இயற்கையான சரீரத்திற்கு செய்யப்படும் பூஜை. சரீரத்தின் ஒவ்வொரு பாகத்திற்கும் செய்யப்படும் பூஜை. ஒவ்வொரு வரியின் முடிவிலும் ஒரு புஷ்பத்தை பகவானுக்கு சமர்ப்பிக்க வேண்டும்)

**ஓம் ஸ்ரீ ஸர்வ தேவதா ஸ்வரூபாய நமஹ பாதௌ பூஜயாமி (பாதங்கள்)**

**ஓம் ஸ்ரீ ஸர்வ சக்தி ஸ்வரூபாய நமஹ குல்பௌ பூஜயாமி (கணுக்கால்கள்)**

**ஓம் ஸ்ரீ பர்த்தி புரீஸ்வராய நமஹ ஜங்கௌ பூஜயாமி (முன்கால்கள்)**

**ஓம் ஸ்ரீ ப்ரசாந்தி நிலயாய நமஹ ஜானுனீ பூஜயாமி (முழங்கால்கள்)**

**ஓம் ஸ்ரீ ஸர்வாதாராய நமஹ ஊரு பூஜயாமி (தொடைகள்)**

**ஓம் ஸ்ரீ சாது ரூபாய நமஹ ஜக்னாம் பூஜயாமி (இடுப்பு)**

ஓம் ஸ்ரீ சச்சிதானந்தாய நமஹ கடிம்  பூஜயாமி (இடை)

ஓம் ஸ்ரீ சத்ய வ்ரதாய நமஹ மத்யமம் பூஜயாமி (உடலின் நடுப்பகுதி )

ஓம் ஸ்ரீ சர்வ பூத அந்தர்யாமிணே நமஹ உதரம்  பூஜயாமி (வயிறு)

ஓம் ஸ்ரீ சர்வ சாக்ஷினே நமஹ ஹ்ருதயம் பூஜயாமி (இதயம்)

ஓம் ஸ்ரீ சாந்தி ஸ்வரூபாய நமஹ ஹஸ்தௌ பூஜயாமி (கைகள் )

ஓம் ஸ்ரீ நிராதம்பராய நமஹ பாஹூன் பூஜயாமி (புஜங்கள் )

ஓம் ஸ்ரீ ஞான போதகாய நமஹ ஸ்கந்தௌ பூஜயாமி(தோள்கள் )

ஓம் ஸ்ரீ ஸித்த சங்கல்பாய நமஹ கண்டௌ பூஜயாமி (தொண்டை )

ஓம் ஸ்ரீ சுந்தர அங்காய நமஹ சுபுகம் பூஜயாமி (மோவாய்)

ஓம் ஸ்ரீ பிரபன்னார்த்தி ஹராய நமஹ அதரோஷ்டம் பூஜயாமி

(கீழுதடு)

ஓம் ஸ்ரீ ப்ரஸன்ன வதனாய நமஹ முகம் பூஜயாமி (முகம்)

ஓம் ஸ்ரீ மனோவாகதீதாய நமஹ நாஸிகம் பூஜயாமி (மூக்கு)

ஓம் ஸ்ரீ பஹுரூப விச்வமூர்த்தயே நமஹ கர்நௌ பூஜயாமி (காதுகள்)

ஓம் ஸ்ரீ புண்ய வீக்ஷணாயை நமஹ நேத்ராணி பூஜயாமி (கண்கள்)

ஓம் ஸ்ரீ சங்கர ஹதாயை நமஹ பாலம் பூஜயாமி (முன் நெற்றி)

ஓம் ஸ்ரீ ஸர்வ ஸித்தி ப்ரதாய நமஹ கேசாநி பூஜயாமி (தலை முடி)

**ஓம் ஸ்ரீ பிரேம ரூபாய நமஹ சிரம் பூஜயாமி (தலை)**

**ஓம் ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ ஸர்வான் அங்காணி பூஜயாமி (உடம்பின் எல்லா பாகங்களும்)**

இப்போது அஷ்டோத்திர பூஜை (இது ஸ்ரீ சத்யசாயி பகவானை அவரது 108 நாமங்களை உச்சரித்து பூஜிப்பது ஆகும். ஒவ்வொரு நாமத்திற்கு பிறகு ஒரு புஷ்பம் கடவுளுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

**ஓம் ஸ்ரீ பகவான் ஈஸ்வராம்பா ஸுதாயை நமஹ**

**ஓம் ஸ்ரீ சாயி ராம பர ப்ரஹ்மணே நமஹ**

**ஓம் ஸ்ரீ ஸாது ஜன ரக்ஷகாய நமஹ**

**ஓம் ஸ்ரீ சத்ய சாயி தேவாய நமஹ**

**ஓம் ஸ்ரீ சர்வோபத்ரவ நிவாரகாய நமஹ**

**ஓம் ஸ்ரீ ஸாரஸ நேத்ராய நமஹ**

**ஓம் ஸ்ரீ ஸெளம்ய வதனாய நமஹ**

**ஓம் ஸ்ரீ சாயி ஸங்கர ரூபாய நமஹ**

**ஓம் ஸ்ரீ சத்ய தர்ம ப்ரகாசகாய நமஹ**

**ஓம் ஸ்ரீ பர்த்தி புரீச்வராய நமஹ**

**ஓம் ஸ்ரீ சித்ராவதி தீர நிவாஸாய நமஹ**

**ஓம் ஸ்ரீ அகண்ட ஜோதி ஸ்வரூபாய நமஹ**

**ஓம் ஸ்ரீ சிவ சாயி ராமாய நமஹ**

**ஓம் ஸ்ரீ ப்ரசாந்தி மந்திர வாஸாய நமஹ**

**ஓம் ஸ்ரீ ஸர்வ ஸித்தி தாயகாய நமஹ**

**ஓம் ஸ்ரீ ஆனந்த ஸாயினே நமஹ**

ஓம் ஸ்ரீ அகண்ட சக்தி யுக்தாய நமஹ

ஓம் ஸ்ரீ வேத புருஷாயை நமஹ

ஓம் ஸ்ரீ வேத ச்ரவண ஆசக்தாயை நமஹ

ஓம் ஸ்ரீ வேதோத்தாரகாய நமஹ

ஓம் ஸ்ரீ வேதசாஸ்திர பண்டிதாய நமஹ

ஓம் ஸ்ரீ பரம அற்புத சரித்ராய நமஹ

ஓம் ஸ்ரீ பாப பஞ்சனாய நமஹ

ஓம் ஸ்ரீ பாவ அதீதாய நமஹ

ஓம் ஸ்ரீ நிதலாக்ஷாயை நமஹ

ஓம் ஸ்ரீ நாநார்த்த போதகாயை நமஹ

ஓம் ஸ்ரீ நவநீத ஹ்ருதயாயை நமஹ

ஓம் ஸ்ரீ நானா ரூப தாரிணே நமஹ

ஓம் ஸ்ரீ மானுஷ வேஷாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸனாதனாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸதா ப்ரஸன்ன வீக்ஷணாய நமஹ

ஓம் ஸ்ரீ கரவீர புஷ்பப்ரியாயை நமஹ

ஓம் ஸ்ரீ ஜகன் மோகனாய நமஹ

ஓம் ஸ்ரீ லோக வசீகர நேத்ராய நமஹ

ஓம் ஸ்ரீ பக்த அபீஷ்ட ப்ரதாய நமஹ

ஓம் ஸ்ரீ பக்த ஹ்ருதய பரிசோதகாய நமஹ

ஓம் ஸ்ரீ சாந்த ஸ்வரூபாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸர்வ சக்தியுதாய நமஹ

ஓம் ஸ்ரீ  ஸர்வமத ஸம்மதாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸ்மரண மாத்ரேன ப்ரஸன்ன தேவாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸஹஜ கருணாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸர்வ கலா ப்ரியாய நமஹ

ஓம் ஸ்ரீ திவ்ய ஹஸ்தாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸர்வ லோக விஷய க்ராஹ்யாயை நமஹ

ஓம் ஸ்ரீ ஸ்ருஷ்டி ஸ்திதி லய காரணாயை நமஹ

ஓம் ஸ்ரீ ஸதாசார ஸம்பன்னாய நமஹ

ஓம் ஸ்ரீ பால யோகீச்வராய நமஹ

ஓம் ஸ்ரீ ஸனாதன தர்ம ஸம்ஸ்தாபன ஆசக்தாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸ்பர்ஷ மாத்ரேன ஸர்வ ரோக நிவாரணாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸகல துரித ஆர்த்தி பஞ்சனாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸகல ஜகதாபி ராமாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸர்வ மங்கள கராய நமஹ

ஓம் ஸ்ரீ காராகார அந்தகாரக்ஞ்யாய நமஹ

ஓம் ஸ்ரீ நாத பிந்து கலாதீதாய நமஹ

ஓம் ஸ்ரீ நாரத முனி ஸன்னுதாயை நமஹ

ஓம் ஸ்ரீ தீன பாந்தவாயை நமஹ

ஓம் ஸ்ரீ பக்த ஜனஹ்ருதய வாஸாய நமஹ

ஓம் ஸ்ரீ பக்த பராதீனாய நமஹ

ஓம் ஸ்ரீ கஜ கீத அலங்க்ருத மாலாதராய நமஹ

ஓம் ஸ்ரீ கஜ கீத க்ருத நமஸ்கார ஸ்வீகராய நமஹ

ஓம் ஸ்ரீ நிரந்தர தேவகண ஸமாஸ்ரிதாய நமஹ

ஓம் ஸ்ரீ அன்ன வஸ்த்ரதாய நமஹ

ஓம் ஸ்ரீ ப்ரபுல்ல வதனாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸகல ஸம்ஸய நிவாரணாய நமஹ

ஓம் ஸ்ரீ வ்யாக்ர ஸிம்ஹாஸன அதிஸ்தாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸர்வலோக சுபம் கராய நமஹ

ஓம் ஸ்ரீ ஸர்வஜன வாஞ்ச பல ப்ரதாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸர்வ ஜகத் வ்யாப்தாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸர்வ லோக பூஜிதாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸதா அம்பரவீக்ஷணாய நமஹ

ஓம் ஸ்ரீ நானா வரத விச்சேதகாய நமஹ

ஓம் ஸ்ரீ தேவதா பீஷ்ட வரதாய நமஹ

ஓம் ஸ்ரீ பஞ்சபூத ஆத்மனே நமஹ

ஓம் ஸ்ரீ வரத பேதநிரோதகாய நமஹ

ஓம் ஸ்ரீ ஜரா மரண வர்ஜிதாய நமஹ

ஓம் ஸ்ரீவேதாந்த ஸார க்ராஹ்யாய நமஹ

ஓம் ஸ்ரீ தூஷண த்ரி ஸிரோ ஹந்த்ரே நமஹ

ஓம் ஸ்ரீ ம்ருதஜீவ உத்தாரகாய நமஹ

ஓம் ஸ்ரீ மனோ ஸங்கல்பகோசராய நமஹ

ஓம் ஸ்ரீ ஸனாதன தர்ம ப்ரமோதாய நமஹ

ஓம் ஸ்ரீ தர்ம ப்ரியாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸத்ய வாக்ய ப்ரியாய நமஹ

ஓம் ஸ்ரீ ஆஸ்ரித வத்ஸலாய நமஹ

ஓம் ஸ்ரீ பூத பவிஷ்யத் வர்த்தமான க்ராஹ்யாய நமஹ

ஓம் ஸ்ரீ மாத்ரு வாக்ய பரிபாலன ப்ரியாய நமஹ

ஓம் ஸ்ரீ மாயா மானுஷ ரூப்யாய நமஹ

ஓம் ஸ்ரீ புண்ய தீர்த்த யாத்ரா ப்ரியாய நமஹ

ஓம் ஸ்ரீ லிங்க மதுவோத்பவாய நமஹ

ஓம் ஸ்ரீ ஜிதேந்த்ரியாய நமஹ

ஓம் ஸ்ரீ அனந்த பத்மனாபாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸர்வ லக்ஷண லக்ஷிதாய நமஹ

ஓம் ஸ்ரீ குடில சித்த வித்வேஷனாய நமஹ

ஓம் ஸ்ரீ குடில குந்தள அலங்க்ருதாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸ்ம்ருத சந்த்ரானாய  நமஹ

ஓம் ஸ்ரீ ஓம்கார ஸ்வரூபாய நமஹ

ஓம் ஸ்ரீ ஹாஸ விலாஸாய நமஹ

ஓம் ஸ்ரீ ஓம்கார நாத ப்ரியாய நமஹ

ஓம் ஸ்ரீ சின்மயாய நமஹ

ஓம் ஸ்ரீ சிதானந்தாய நமஹ

ஓம் ஸ்ரீ நித்ய ஸத்ய வ்ருதாய நமஹ

ஓம் ஸ்ரீ விஸ்மய தேஹாய நமஹ

ஓம் ஸ்ரீ தாம்பூல ராகாருண அதரோஷ்டாய நமஹ

ஓம் ஸ்ரீ ஜனானந்த ப்ரியாய நமஹ

ஓம் ஸ்ரீ ரக்த வர்ண பீதாம்பர தாராய நமஹ

ஓம் ஸ்ரீ ஸ்வர்ண வில்வ தள ஸ்ருஷ்டி கர்த்ரே நமஹ

ஓம் ஸ்ரீ ஸதா ஆத்மலிங்க பிரதாதாய நமஹ

ஓம் ஸ்ரீ ஜியிர் லிங்க பிரதாதாய நமஹ

ஓம் ஸ்ரீ ஸாயிராம பரப்ரஹ்மணே நமஹ

ஓம் ஸ்ரீ ஜகத் குரவே நமஹ

அத: அஷ்டோத்திர பூஜாம் ஸமர்ப்பயாமி (அஷ்டோத்திர பூஜை நிறைவடைந்தது. பக்தர்கள் விரும்பினால் ஸ்ரீ சாயி பகவானின் சஹஸ்ர நாம பூஜை செய்யலாம்.

பிறகு பின்வரும் பூஜை செய்யப்படும்)

வனஸ்பதி சம்பூதோ கந்தாத்யோ கந்தவ தமஹ ஆக்ரேயம் ஸர்வ தேவானாம் தூபோயம் ப்ரதி க்ருஹ்யதாம், ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ, தூபம் ஆக்ராபயாமி (ஊதுபத்தி அல்லது தசாங்கம் கொளுத்தி காண்பிக்கவும்)

சாஜ்யம் த்ரிவர்த்தி சம்யுக்தம் வஹ்னினா த்யோதிதம் மயா, தீபம் க்ருஹாண தேவேச த்ரைலோக்ய திமிராபஹம், ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ, தீபம் ஸமர்ப்பயாமி. (மூன்று திரி உள்ள விளக்கை ஏற்றி காண்பிக்கவும்)

தூப தீபானன்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி (தன் முன் உள்ள தாம்பாளத்தில் ஒரு உத்தரணி அளவு நீரை விடவும்)

அவசரார்தம் கல்போக்த பிரசாத நைவேத்யம் ஸமர்ப்பயாமி (இப்பொழுது ரவை அல்லது உடைத்த கோதுமை, சர்க்கரை, உலர்ந்த திராட்சை, முந்திரி பருப்பு, பாதாம் பருப்பு, நெய் முதலியன நைவேத்யமாக அர்ப்பணிக்க வேண்டும். பிறகு இதை பிரசாதமாக மற்றவர்க்கு விநியோகிக்கலாம்)

ஓம் பூர் புவஸ்வஹ ஓம் தத் ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்யதீமஹி! தியோயோந; பிரசோதயாத்,

ஓம் தேவ ஸவித ப்ரஸுவ (புஷ்பத்தால் கலச நீரை எடுத்து நைவேத்ய பொருட்கள் மீது தெளிக்க வேண்டும்)

சத்யம் த்வர்த்தேன பரிஷிஞ்சாமி, அம்ருதமஸ்து, அம்ருதோ பஸ் தரணமஸி, ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ, கல்போக்த பிரசாத நைவேத்யம் ஸமர்ப்பயாமி (பக்தர் தன் உள்ளங்கைகளை லேசாக அசைத்து நைவேத்ய பொருட்களை கடவுளுக்கு ஊட்டுவது போல் பாவனையாக செய்ய வேண்டும்).

ஓம் ப்ராணாய ஸ்வாஹா

ஓம் அபானாய ஸ்வாஹா

ஓம் வ்யாநாய ஸ்வாஹா

ஓம் உதானாய ஸ்வாஹா

ஓம் ஸமானாய ஸ்வாஹா

ஓம் ப்ரஹமனே ஸ்வாஹா

ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ, மத்யே மத்யே பானீயம் ஸமர்ப்பயாமி (பின் வரும் மந்திரங்களை கூறி, தாம்பாளத்தில் ஒரு உத்தரணி நீரை விடவும்)

அம்ருதா பிதா நமஸி உத்தரா போஷணம் ஸமர்ப்பயாமி, ஹச்தௌ ப்ரஷாலயாமி, பாதௌ ப்ரஷாலயாமி, சுத்த ஆசமனீயம் ஸமர்ப்பயாமி.

பூகி பல சமாயுக்த, நாகவல்லி தலைர்யுதம், கற்பூர சூர்ண சம்யுக்தம், தாம்பூலம் ப்ரதி க்ருஹ்யதாம். ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ சதக்ஷின தாம்பூலம் ஸமர்ப்பயாமி (பூஜை செய்து வைப்பவருக்கு வெற்றிலை பாக்குடன் சிறிது பணம் தக்ஷிணையாக வைத்து தாம்பூலம் அளிக்க வேண்டும்).

கற்பூர தீபம் ஸுமனோஹரம் ப்ரபோ ததாமி, தே தேவ வர ப்ரஸீத பாபாந்தகாரம் த்வரிதம் நிவாரய ப்ரக்ஞான தீபம் மனஸி பிரதீபாய ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ கற்பூர ஆனந்த நீராஞ்சனம் ஸமர்ப்பயாமி ஸ்வர்ண திவ்ய மந்திர புஷ்பம் ஸமர்ப்பயாமி (மந்திர புஷ்ப மந்த்ரம்) யோபாம் புஷ்பம் வேதா புஷ்பவான், ப்ரஜாவான், பஸுவான் பவதி, சந்திர மாவ அபாம் புஷ்பம், புஷ்பவான், ப்ரஜாவான், பஸுவான் பவதி. ய ஏவம் வேதா யோபமாய தனம் வேத ஆயாதனம் பவதி (பிறகு) அன்யதா சரணம் நாஸ்தி, த்வமேவ சரணம் மம, தஸ்மாத் காருண்ய பாவேன ரஷ சாயீஸ்வர ப்ரபோ ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி தேவதாப்யோ நமஹ.

ஆத்ம ப்ரதக்ஷின நமஸ்காரான் ஸமர்ப்பயாமி (பக்தர் எழுந்து நின்று, கைகளை கூப்பிக் கொண்டு, தன்னையே மூன்று முறை சுற்றி பாவனையாக நமஸ்காரம் செய்ய வேண்டும். பிறகு உட்கார்ந்துக் கொண்டு பூஜையை தொடர வேண்டும்).

ஸமஸ்த தேவோபசார, ராஜோபசார, சக்த்யோபசார, பக்த்யோபசார பூஜாம் ஸமர்ப்பயாமி (பக்தரும் பூஜை செய்பவரும் மற்றும் குழுமியிருக்கும் மக்களும் பகவானுக்கு பக்தியுடன் நமஸ்காரம் செய்ய வேண்டும்)

பிரார்த்தனை :



ஆவாஹனம் ன ஜானாமி, ன ஜானாமி தவார்ச்சனம்

பூஜாவிதம் ந ஜானாமி, க்ஷம்யதாம் பக்தவத்ஸலா.

மந்த்ரஹீனம், க்ரியாஹீனம், பக்திஹீனம் சுரேஷ்வரா, யத் பூஜிதம் மயா, தேவா, பரிபூர்ணம், ததாஸ்து, தே.

புத்ரம் தேஹி, தனம் தேஹி, ஸர்வான் காமாம்ஷ்ச, தேஹி மே, தேஹி ஷாந்திம் அவிசின்னாம், ஸர்வத்ர தவ தர்சனம்.

கர சரண க்ருதம் வா, காயஜம் கர்மஜம் வா, ஸ்ரவண நயனஜம் வா, மானஸம் வா, அபராதம், விஹிதம் அவிஹிதம் வா, ஸர்வம் ஏதத் ஷமஸ்வ, ஜெய ஜெய கருணாப்தே, ஹே ப்ரபோ சாயி தேவா.

யஸ்யம் ஸ்ம்ருத்யாச, நாமோக்தயா, தபாஹ், பூஜா க்ரியாதீஷு ந்யூனம் ஸம்பூர்ணதாம் யாதி, சாயீம் வந்தே தவ அச்யுதம்,

அனயா த்யான ஆவாஹனாதி ஷோடசோபசார பூஜாயாம் ச பகவான் ஸர்வாத்மகாஹ் , ஸ்ரீ சத்ய சாயி தேவதா ஸுப்ரீதோ, ஸுப்ரசன்னோ, வரதோ பவது.

ஸ்ரீ சத்ய சாயி தேவதா பிரசாதம் ஸிரஸா தாரயாமி (பூஜை செய்த மலர்களிலிருந்து ஒரு புஷ்பத்தை பக்தி பாவத்துடன் எடுத்து, ஸ்ரீ சாயி பிரசாதமாக கருதி, பக்தர் தன் தலையில் வைத்து கொள்ள வேண்டும்)

# ஸ்ரீ சத்ய சாயி விரத பூஜை - பாகம் 4A

## பகவானின் திவ்ய சரித்திரம்

## அத்தியாயம் - 1

**லீலா காண்டம் (பால ஸ்வாமியின் விளையாட்டுகள்)**



**சர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி விரத கதை:**

இந்த புண்ணிய பாரத பூமியில் யுகம் யுகமாக, கடவுள் மனித குலத்தின் நன்மைக்காக, மேன்மைக்காக பலப் பல அவதாரங்கள் எடுத்துள்ளார் என்பது எல்லோரும் அறிந்த ஒரு விஷயம். உலகில் பல பெரிய நாடுகள் இருக்கின்றன. ஆனால் கடவுளின் மகிமை எல்லாம் பெரிய அளவில் பாரத நாட்டுக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. இது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு விஷயமாகும். எண்ணற்ற யோகிகள், துறவர்கள், மடாதிபதிகள், ரிஷிகள், பக்தர்கள் யாவரும் இப்புண்ணிய பூமியில் பிறந்திருக்கின்றனர். இவர்கள் சனாதன தர்மத்தை கடைப்பிடித்து, ஆசைகளை துறந்து, தபோநிலையை பேணி காத்து, தன்னையே அதற்காக அர்ப்பணித்துள்ளனர். இவர்கள் ஆன்மீக ரகசியங்களை சுற்றுப்புறமுள்ள சாதாரண மனிதர்களுக்கு வெளிப்படுத்தி

உள்ளார்கள். இப்படிப்பட்ட புண்ணிய ஆத்மாக்கள் பாரத பூமியில் ஜன்மம் எடுத்ததால் பாரதம் "**ஆர்ய வர்தா**" எனவும் அழைக்கப்பட்டது.

உலகத்தில் எப்பொழுதெல்லாம் சனாதன தர்மத்திற்கு அபாயங்களும், தடைகளும் ஏற்படுகின்றனவோ புராதன முனிவர்களின் சொற்படி, அப்பொழுதெல்லாம், கடவுள் தானே இப்பூமியில் அவதாரம் எடுத்து அபாயங்களை ஒழித்து, தர்மத்தை நிலை நாட்டுவார். இது ஒரு புதுமையான விஷயமல். படைப்பு என்பது எற்பட்டதிலிருந்தே, யுகம் யுகமாக, கடவுள் இவ்வாறு செய்துக் கொண்டிருக்கிறார். திருவுள சித்தம், என்றும், எப்பொழுதும், தடையில்லாததும், முடிவில்லாததும் ஆகும். எத்தனை திறமையான மனிதனாக இருந்தாலும், இத்தர்மத்தின் உண்மையான ரூபத்தை விவரிக்க இயலாது. பிறகு நம்மைப் போன்ற சாதாரண மானுடர் எப்படி இதையெல்லாம் புரிந்துக் கொள்வது?

பகவானே பகவத் கீதையில் கூறியுள்ளது யாதெனில் - தர்மத்தை காப்பாற்ற யுகம் யுகமாக நான் அவதாரம் எடுப்பேன். அதாவது தர்மம் என்பது மாற்ற முடியாததும், அழிவில்லாததும் ஆகும். எங்கெங்கே அதர்மம், அந்நியாயம், தீமை நடக்கும் அபாயம் உள்ளதோ அங்கேயெல்லாம் கடவுள் அவதாரம் எடுத்து, தீய சக்திகளை ஒழித்து, தர்மத்தை நிலைநாட்டுவார். ஆனால் நம்மை போன்ற பாமர மனிதர்கள் கடவுளின் கணக்கில்லா அவதாரங்களை கணக்கு வைத்துக் கொள்ள இயலாது. நாம் இப்போது கலியுகத்தில் இருக்கிறோம். நம்மைச் சுற்றிலும் அதர்மம், பாபம், அநீதி, கொடூரம், அட்டூழியம் எல்லாவற்றையும் காண்கிறோம். ஆறு விதமான தீய சக்திகள் நம்மை ஆன்மீக வழியில் ஈடுபட விடாமல் தடுக்கின்றன. (காமம் - அதீத காதல், க்ரோதம் - கோபம், லோபம் - கஞ்சத்தனம், மோஹம்-அளவற்ற ஆசை, மதம்-கர்வம், மாத்சர்யம் - பொறாமை)

இத்தீய குணங்களே உலகில் ஏராளமாக வளர்ந்துள்ளன. நல்ல குணங்களான பக்தி, நம்பிக்கை, பண்பு, மரியாதை ஆகியவை காண அரிதாகி விட்டன. ஒருவர் மற்றவருக்கு கொடுக்க வேண்டிய சாதாரண நடைமுறை தகுதியைக் கூட மனிதன் கடைப்பிடிப்பதில்லை. இவ்வாறு யாரேனும் ஒருவர் இருவர் இப்பண்புகளைக் கடைப்பிடித்தாலும் அவர்களது வாழ்க்கை முறை மிக கடினமாகி விடுகிறது. நல்ல பண்புகளைக் கெடுக்க நாஸ்திகம் என்னும் விஷம் எல்லா இடமும் பரவி அதன் ஆதிக்கத்தை காண்பிக்கிறது. கருணையுள்ள கடவுள் இதைக் கண்டு மனித ரூபம், பரப்ரஹ்ம, சச்சிதானந்த மூர்த்தியாக அவதாரம் செய்ய தீர்மானித்துள்ளார். தன் காரியத்தை சாதகமாக்க அவர் சித்ராவதி நதிக்கரையில் உள்ள சிறிய கிராமமான புட்டபர்த்தியை தேர்ந்தெடுத்துள்ளார். இக்கிராமம் ஆந்திர பிரதேசத்தில், ராயல் சீமா எல்லையில் அனந்தபூர் ஜில்லாவில் புக்கப்பட்டணம் அருகே உள்ளது.

இக்கிராம சூழ்நிலை நம்மை பகவான் கிருஷ்ணன் பாலகனாக லீலைகளும், குறும்புகளும் செய்த வ்ரஜ பூமியை நினைவு படுத்துகிறது. ஒரு காலத்தில், புட்டபர்த்தியானது ரத்னாகரா என்ற குல பெயருடைய சூர்யா வம்ச ராஜாக்களின் ஆதிக்கத்தில் இருந்தது. இக்குடும்பத்தை சேர்ந்தவர்கள் பொதுவாக சாதுவாகவும், பக்தி உடையவர்கள் ஆகவும் இருந்தனர். பலர் உலக வாழ்வைத் துறந்து, சந்நியாசம் மேற்கொண்டு அவதூதர்கலாக வாழ்ந்தனர். சமீப காலத்தில் கொண்டம ராஜு என்பவர் இக்குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தவர். இவர் சிறந்த பக்திமான். இராமாயணத்தின் பல பாடல்களை மனப்பாடமாக சொல்லும் திறமைக் கொண்டவர். பொது இடங்களில் அவர் இப்பாடல்களை பாடினால். கேட்ட பொது மக்கள் மிக சந்தோதம் அடைந்தனர் .இவர் பல தர்ம ஸ்தாபனங்களை உருவாக்கியதாக கூறப்படுகின்றது. இவரது மனைவியான ஸ்ரீமதி. லக்ஷ்மம்மாவும் பல விரதங்களை ஆழ்ந்த பக்தியுடன் கடைப்பிடித்துள்ளார்.

இத் தம்பதிக்கு பெத்த வெங்கம ராஜு, சின்ன வெங்கம ராஜு என இறந்து மகன்கள் இருந்தார்கள். பெரிய மகன் தன் தந்தையை பின்பற்றி சங்கீத கலைகளில் சிறந்து இராமாயண பாட்டுகளை பாடி வந்தார். சிறிய மகன் புத்தகங்கள் எழுதுவதிலும், மூலிகை மருத்துவம் மற்றும் ஜோதிட கலையில் சிறந்து விளங்கினார். நாளடைவில், பெத்த வெங்கம ராஜு மீனரகண்ட சுப்பா ராஜுவின் மகளான ஈஸ்வரம்மாவை மணந்துக் கொண்டார். இவர்கள் "ரத்னாகர்" வம்சத்தின் பந்துக்கள். இவர்களுக்கு முறையே மூண்டு செல்வங்கள் பிறந்தன. பெரிய மகனின் பெயர் சேஷம ராஜுவும், பெண் மக்கள் பெயர் வெங்கம்மாவும், பர்வதம்மாவும் ஆகும்.

சிறிது காலத்திற்குப் பிறகு ஈஸ்வரம்மா நான்காவது முறையாக கற்பமாக இருந்தார். வெளிப் பார்வைக்கு பிறக்காத இக்குழந்தையும் மற்ற குழந்தைகள் போலவே காணப்பட்டது. ஆனால் உண்மை அது அல்ல. வேதங்கள், பர ப்ரஹ்மத்தை ஆதி மூல படைப்பாக கருதின. அதையே சத், சித், ஆனந்தம் என வர்ணிக்கிறார்கள். அதாவது பரமானந்தனாக இருப்பவர் ஈஸ்வரம்மாவின் வயிற்ருக்குள் வளர்ந்துக் கொண்டிருந்தார்.

வயிற்றில் இருந்த பரமன் சில அபூர்வ சக்திகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். திடீர் திடீரென்று இரவு வேளைகளில் கொண்டம ராஜுவின் வீட்டில் சங்கீத வாத்தியங்களின் முழக்கம் கேட்கும். இதை பிறக்கப் போகும் குழந்தைக்கு சுப சகுனமாக கருதியோ ,வேறு எந்த விதமான சந்தேகமோ யாரும் படவில்லை. இதே மாயையின் சக்தி; இம் மாயையை கடவுளே பரப்பிக் கொண்டிருந்தார். தற்செயலாக குழந்தைப் பிறப்பு சம்பந்தமாக ஒரு நிகழ்வு ஏற்பட்டது. பகவானின் பாட்டி (தந்தையின் தாயார்) லக்ஷ்மம்மா பக்கத்து வீட்டில் நடந்த சத்ய நாராயண பூஜைக்கு சென்றிருந்தார். அங்கிருந்து பிரசாதம் கொண்டு வந்து தன் மருமகளுக்குக் கொடுத்தார். சற்று நேரத்தில் குழந்தைப் பிறந்தது.

மனதாலோ, வார்த்தைகளாலோ புரிந்துக் கொள்ள முடியாத பகவான், தன் திவ்ய சாதனைக்காக, உலகை மேம்படுத்த மனித ரூபத்தில் வந்தார். பிறந்த வேளை ப்ரஹ்ம முஹூர்த்தம். **1926**ம் வருடம், அதாவது அக்ஷய வருடம் நவம்பர் 23ம் தேதி (கார்த்திகை மாதம்) திங்கட் கிழமை, திருதியை அன்று அதிக்காலையில் இப்பூமியில் அவதாரம் செய்தார். பிறந்த போதே குழந்தை மிக அழகாக இருந்தது. வர்ணிப்பது என்றால் ப்ரகாசமுடைய பெரிய கண்களும், அதில் கருணையும், அன்பும் பொங்கி வழிந்திட முன் நெற்றியில் புரளும் சுருண்ட தலை முடியுமாக குமிழிட்ட கண்களுமாக பார்ப்பவரை மதி மயக்கச் செய்தது. ஸ்ரீ மகா விஷ்ணுவின் மார்பில் இருக்கும் ஸ்ரீவத்சம் போன்று குழந்தைக்கு மார்பில் பிறவி மச்சம் இருந்தது. உதடுகள் ரோஜா மலரை ஒத்த நிறத்துடன் அழகாக இருந்தன. சிறிய பாதங்களில் திவ்ய முத்திரைகளான சங்கும், சக்கிரமும் இருந்தன. மொத்தத்தில் குழந்தை பௌர்ணமி நிலவைப் போல ப்ரகாசமாகவும், அழகாகவும் இருந்தது.

வீட்டில் இருப்போரும், கிராமத்து மக்கள் அனைவரும் இந்த அதிசயமான குழந்தையைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைந்தனர். சத்ய நாராயண ஸ்வாமியின் பிரசாதத்தை சாப்பிட்ட சற்று நேரத்திற்குப் பிறகு குழந்தை பிறந்ததால் தாத்தா, பாட்டி அக்குழந்தைக்கு சத்ய நாராயணன் என்ற பெயர் பொருத்தமாக இருக்கும் என நினைத்து அப்பெயரையே சூட்டினர். குழந்தையே தெய்வத்தின் அவதாரம் என தெரியாமலேயே அவர்களுடைய பக்தியால் அப்பெயரைச் சூட்டினார்கள். பெயருக்குத் தகுந்தாற்போல் குழந்தை, நிர்குண பரபிரம்மமாக, மாற்றமில்லா, முடிவில்லா, எல்லையில்லா, ஆதியும் அந்தமும் இல்லாததாக வளர்ந்தது. சத்ய என்றால் உண்மை. நாராயண என்றால் எப்பொழுதும் நிறைந்துள்ள தெய்வீக சக்தி. இவ்விரண்டு வார்த்தைகள் சேர்ந்து உள்ளார்ந்த பொருளை விவரிக்கிறது. உண்மையிலேயே, சத்ய நாராயணா குழந்தை பருவத்திலேயே தெய்வீக சக்தி கொண்டு விளங்கினார்.

குழந்தை வளர வளர, தெய்வீக சக்திகள் வெளிப்படலாயிற்று. சாதாரண சக்திகளுக்கு அப்பாற்பட்ட ஆற்றல், அளவுக் கடந்த கருணை, பிரேமை, பொறுமை, அஹிம்சையைக் கடைப்பிடித்தல், பேச்சே இனிய பாடல் போலவும், பாலகோபாலனின் குழலோசை போலவும், களங்கமில்லாத தோற்றமுமாக குழந்தை வயதிற்கு மீறிய ஆற்றல்களுடன் இருந்தார். பலரும் தெய்வமே குழந்தை வடிவில் பூலோகத்திற்கு வந்து விட்டதோ என மனதில் எண்ணினார்கள். இருந்தாலும் அவருடைய அடையாளத்தை எவராலும் கண்டுப்பிடிக்க முடியவில்லை. அவர் கிராம மக்கள் அனைவர் மனதையும் கொள்ளைக் கொண்டார். சாதாரண பாலகனைப் போல் நடமாடினாலும், விவரிக்க இயலாத ஒரு தனித் தன்மையுடன் விளங்கினார். அவர் சொல்லேத் தீர்ப்பு; எவரும் எதிர் வார்த்தை கூற மாட்டார்கள். கிராமத்து சிறுவர்களை அவர் ஒன்றுக் கூட்டினார். அவரது தலைமையில் பாலகர்கள் சிறு குழுக்களாக வீதி தோறும் சுற்றி, தெய்வீக பாடல்களும் பஜனைகளும் பாடி வந்தனர். புதிய பாட்டுக்களை அமைத்து, மற்ற பாலகர்களுக்கு கற்றுக் கொடுத்து பாட வைத்தார். பல திறமைகள் கொண்ட இப்பாலகனையும் அவர் பஜனை குழுக்களையும் எல்லோரும் விரும்பினார்கள்.

வாழ்க்கையில் எளிய நிலமையிலுள்ளவர், உடல் ஊனமுற்றவர் ஆகியவரிடம் மிகவும் அன்பு காட்டி வந்தார். தன் வீட்டிலிருந்து உணவை எடுத்து வந்து இல்லாதவர்களுக்கு அளித்து வந்தார். தான் உண்ணாவிட்டாலும் மற்றவரை உணவு உண்ண வைத்தார். கிராமத்தில் காலரா போன்ற கொடிய நோய் உள்ள வீடுகளுக்கு சென்று குழுவுடன் பஜனைகள் பாடி அவர்களுக்கு ஆறுதல் அளித்தார். சிறுவர்கள் இவரை குருவாக மதித்தனர். எப்பொழுதும் ஸ்வாமியை சுற்றி இருந்து, அவர் இட்ட ஏவல்களை தாமதமின்றி செய்து வந்தனர். சின்ன வயதிலேயே சத்ய நாராயணா தன் குழுவுடன் சேர்ந்து நாடகங்கள் நடத்தி, பஜனைப் பாடல்கள் பாடி ஊர்வலமாக சென்று வந்தனர். தன் தெய்வீக குணத்தை பற்றி

மற்றவர்களுக்கு யாதொரு குறிப்பும் கொடுக்காமல் பல நற்காரியங்களை சமூகத்தின் நலத்திற்காக செய்து வந்தார். அவருடைய அதீத நன்னடத்தை, நாளடைவில் சிறுவனாக இருப்பினும் அவரை புட்ட பர்த்தி கிராமத்தின் தலைவர் ஆக்கியது. இவ்வாறு கிராம மக்கள் சிறுவனை கொண்டாடும் போது, வீட்டில் இருந்த உறவினரும் மகிழ்வுற்றார்கள்

புட்டபர்த்தியில் ஒரு தொடக்கப் பள்ளிக்கூடம் இருந்தது. இந்த பள்ளிக்கூடத்தை நடத்திய ஆசிரியர் சற்று முன்கோபம் உள்ளவர்; கடுமையாக நடந்துக் கொள்பவர். சிறிய தவறுக்கு கூட கடினமானத் தண்டனை கொடுப்பவர். சத்ய நாராயணன் அப்பள்ளியில் ஒரு மாணவன். ஆசிரியருடைய நடவடிக்கைகள் அவர் மனதுக்கு பிடிக்கவில்லை. ஆதலால் அவர் சரியான நடத்தைப் பற்றி சிறிய கவிதைகளும், பாட்டுகளும் இயற்றி மற்ற மாணவர்களுக்கும் கற்றுக் கொடுத்து பாட வைத்தார். ஆசிரியர் வெட்கப்பட்டு தன்னை திருத்திக் கொண்டார். கடவுள் எல்லாக் கலைகளிலும் தேர்ந்த குருவாயிற்றே!!! அதனால் சிறு வயதிலேயே கவிதை அவருக்கு தானே இயற்ற வந்தது. அவர் சச்சிதானந்த மூர்த்தியின் மனித வடிவம். பதினான்கு லோகங்களையும் தன்னுள் அடக்கியவர். பாலகன் சத்ய நாராயணனுடைய ஒவ்வொரு குறும்பும், கும்மாளமும் பக்தியின் லீலைகளாகும்.

அன்று அப்பாலகன் இயற்றிய பாடல்கள் இன்று வரை பக்தர்களால் பாடப்பட்டும், கேட்கப்பட்டும் வருகின்றன .கிருஷ்ணாவதாரத்தில் பால கோபாலன் செய்தது போல் சத்ய நாராயணன் சித்ராவதி நதிக்கரையில் தன் நண்பர் குழுவுடன் கேளிக்கை செய்து, குறும்புகள் செய்து'அவர்களுடன் உணவும் உண்டு லீலைகள் செய்து வந்தார். ஒவ்வொரு நாளும் பழங்களும், தின்பண்டங்களும் சிருஷ்டித்து எல்லோருக்கும் பிரசாதமாக வழங்கி வந்தார். மற்றவர்கள் "எங்கிருந்து கிடைத்தன?" என கேட்டதற்கு தன் வீட்டிலிருக்கும் ஒரு சக்தி இவைகளை கொடுத்ததாக புன்சிரிப்புடன் சொல்லி வந்தார்.

இவ்வாறு எட்டு வருடங்கள் கடந்தன. பாலகன் சத்ய நாராயணன் ஆரம்பப் பள்ளிக் கூடத்தை முடித்தார். மேல் படிப்புக்காக புக்கப்பட்டினத்தில் ஒரு நடுநிலைப் பள்ளியில் சேர்க்கப் பட்டார். அங்கிருந்த ஆசிரியர்களும், மாணவர்களும் அவரை மிகவும் அன்பாக நடத்தினர். பாலகனுடைய நற்பண்புகள் எல்லோரையும் கவர்ந்து சந்தோஷப் படுத்தின. தன் அவதார ரகசியத்தை இங்கு எவருக்குமே அவர் தெரியப் படுத்தவில்லை. பக்தர்களையும், நற் பண்புடையோர்களையும் காப்பது தான் நோக்கம் என எவரும் புரிந்துக் கொள்ளவில்லை. வகுப்பில் எப்போதும் ஏதோ சிந்தனையில் மூழ்கியவராக பாலகன் காணப்படுவார். அது அவர் சுபாவம். ஒரு முறை, கடுமை குணம் கொண்ட ஒரு ஆசிரியர் பாடப் புத்தகத்தில் கற்றுக் கொடுத்த பாடம் எதையும் சத்ய நாராயணன் எழுதாததால் அவரைப் பிடித்து பெஞ்சின் மீது நாள் முழுவதும் பள்ளி முடியும் வரை ஏறி நிற்கும்படி தண்டனைக் கொடுத்தார். பாலகன் ஆசிரியரின் ஆணைக்கு கீழ்படிந்து உடனே பெஞ்சின் மேல் ஏறி நின்றார். எதுவும் செய்ய முடியாததால், வகுப்பில் உள்ள மற்ற மாணவர்கள் சற்று அமைதியற்று இருந்தனர். வகுப்பு முடிந்தவுடன் ஆசிரியர் நாற்காலியிலிருந்து எழ முயற்சித்தார்.

ஆனால் அவரால் எழுந்திருக்க முடியவில்லை. நாற்காலியோடு ஒட்டிக்கொண்டது போல் இருந்தார். அடுத்த வகுப்பு எடுக்க வந்த ஆசிரியர் இதைக்கண்டு ஆச்சரியம் அடைந்தார். அந்த ஆசிரியர் சத்ய நாராயணனிடம் அன்பு கொண்டவர். இப்பாலகன் கடவுளின் அவதாரம் என அவர் உள்மனத்தில் ஓர் எண்ணம் இருந்தது. இவ்வாசிரியர் பாலகனை உட்கார அனுமதி அளித்ததும் பரிதாபமான முன் வகுப்பு ஆசிரியரும் நாற்காலியிலிருந்து விடுபட்டார். இந்த விஷயம் பள்ளிக்கூடம் முழுவதும் பரவி அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர்.

ஆசிரியரின் இந்த இக்கட்டான நிலைக்கு பாலகன் சத்தியத்தின் கோபமோ வன்மமோ காரணம் இல்லை. பாலகனின் அதீத தெய்வ

சக்தியை சிறிது வெளிக்காட்டும் ஒரு குறும்பே ஆகும். பாலகனின் வசீகரம் மட்டும் அல்ல; அவரின் ஒழுக்க முறை, சுய கட்டுப்பாடு, அமைதி போன்ற குணங்களும் மற்றவர்களை கவர்ந்தன.

பள்ளியில் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் சத்யம் மட்டுமே பிரார்த்தனை கீதங்கள் பாடுவார். பாட்டோ, நாடகமோ, விளையாட்டோ எது நடந்தாலும் அதில் முக்கிய பாத்திரம் ஏற்று கௌரவ படுத்துவார். அவருடைய லீலைகளையும், தெய்வீக சக்திகளையும் எவ்வளவோ மறைக்க முயன்றாலும், அவை பொங்கி பூரித்து வெளிப்பட்டன. நாட்கள் முன்னேறின. சத்யத்தின் மூத்த சகோதரர் சேஷம ராஜு, அனந்தபூர் மாகாணத்தில் உரவகொண்டா என்ற சிறு ஊரில் உயர்நிலை பள்ளியில் தெலுங்கு ஆசிரியராக இருந்து வந்தார். ஆங்கிலம் படித்து, பிற்காலத்தில் பெரிய அதிகாரியாக வரவேண்டும் என்ற எண்ணத்தோடு தன் இளைய சகோதரரை தன் பள்ளியிலேயே படிக்க வைக்க ஆசைப் பட்டார். தன் பெற்றோரிடம் அனுமதி கோரி, தன் பள்ளியிலேயே தன்னுடைய இளைய சகோதரரை எட்டாவது வகுப்பில் சேர்த்தார். பாலகன் சத்யத்தின் திகைக்க வைக்கும் புகழ் அவருக்கு முன்பே உரவகொண்டாவை சென்று அடைந்துவிட்டது. அங்குள்ள ஆசிரியர்களும், மாணவர்களும் அவரை மிகவும் அன்புடனும், மரியாதையுடனும் நடத்தினர். மக்கள் தங்கள் கஷ்டங்களை அவரிடம் வந்து கூறியதும் அவர்களது இறந்த காலம், எதிர் கால நிகழ்ச்சிகளைக் கூறி அவர்கள் மனதை சமாதானப் படுத்தினார். தன் பழக்கப் படி ஒரு கை அசைப்பில் ஏராளமான பழங்களையும், தின்பண்டங்களையும் சிருஷ்டித்தார். இதைக் கண்ட மக்கள் மெய்மறந்து இருந்தனர். இவர் நடத்தும் லீலைகளைக் கண்டு கடந்த ஜன்மங்களில் எத்தகைய புண்ணியங்கள் செய்து தெய்வீக சக்தியை பெற்றாரோ, இப்பொழுது இவ்வளவு பரிசுகளை எல்லோர் கண் முன்னும் சிருஷ்டிக்கிறார் என நினைத்து ஆச்சரியப் பட்டனர். இவருடைய பெருமை எல்லா ஊர்களிலும் பரவ ஆரம்பித்தன - உதாரணத்திற்கு கமலாபுரம், தர்மாவரம், பெனுகொண்ட,

புக்கப்பட்டணம் போன்றவை - மக்கள் கூட்டம், கூட்டமாக உரவகொண்டாவிற்கு வர தொடங்கினர். கஷ்ட நிலையில் உள்ளோர், நஷ்டம் அடைந்தோர் தன் நிவாரணத்திற்காக இவரிடம் வர தொடங்கினர். படித்த மேதைகளும், வேதாந்திகளும் இவரை நேருக்கு நேர் சந்திக்க அஞ்சினர். பல வருடங்களாக ஞான நூல்களை கற்று தேர்ந்து, பலருக்கு கற்றுக் கொடுத்திருந்த போதும், பாலகன் சத்தியத்தை கண்டதும், தான் புரிந்து கொண்டதும் கற்றுக் கொடுத்ததும் தவறோ என அவர்கள் எண்ணினார்கள்.

சத்யம் அவர்களின் தவறுகளைத் திருத்தினார். அவர்களுக்கு நூல்களின் பொருளை தன்னுடைய கைத் தேர்ந்த முறையில், அவர்கள் நினைத்துப் பார்க்காத வகையில் கூறுவார். இதனால் நேருக்கு நேர் சந்திக்கும் போது அவர்களின் மனதில் அவரது ஆழ்ந்த அறிவையும் புரிந் கொள்ளும் முறையையும் கண்டு பெரும் மதிப்பு ஏற்பட்டது. நட்புரிமையுடன் செய்யும் ஆட்சேபத்திற்கு அவர்கள் எதிர் கேள்வி கேட்க அஞ்சினர். எத்தனை கைத் தேர்ந்தவர்களாக அவர்கள் இருப்பினும், பாலகன் சத்யம் சிறிதும் தயக்கமின்றி அவர்களது தவறான எண்ணங்களை சுட்டிக் காட்டி திருத்தினார். பார்ப்பவர்கள் சத்தியத்தின் அறிவைக் கண்டு திகைத்து நின்றனர். தோற்றத்தில் அதிகம் கல்வியில்லாத சிறு பாலகனாக தோன்றும் இவர் எப்பொழுது இக்கலைகளில் தேர்ந்தார்?? இச்சிறு பாலகன் பல நூல்களில் உள்ள தத்துவங்களை, ரகசியங்களை எவ்வாறு கற்றார்?? பண்டிதர்களுக்கே இவ்விஷயங்களைப் பற்றி அறிய பல வருடங்கள் தேவைப்படும். நம்ப முடியாமல் மக்கள் ஆச்சரியம் அடைந்து சிறு குரல்களில் விமர்சித்துக் கொண்டனர். ஆனால் இவர்கள் சந்தேகங்களை தீர்ப்பவர் யாரோ??

பல சமயம் பாலகன் சத்யம் எங்கோ சூன்யத்தை நோக்கிக் கொண்டு தனக்குத் தானே சிரித்துக் கொள்வார். தன்னை சுற்றியுள்ள மக்களிடம் பேசினாலும் அவர் பார்வை எங்கோ வெகு தூரத்தில் இருக்கும். அடிக்கடி தன் கண்களை மூடியவாறு, ஏதேனும் பாட்டு

பாடிக் கொண்டிருப்பார்; அல்லது அங்கிருந்து விலகி மணிக்கணக்காக ஏகாந்தமாக அமர்ந்திருப்பார். இதைக் கண்ட குடும்பத்தினர் பயமடைந்தனர். ஏதேனும் மானசீக வியாதியோ அல்லது ஆவிகளின் ஆக்கிரமிப்போ என எண்ணினர்.

பலர் பலவிதமாக பேசி வதந்திகளை கிளப்பினார்கள். ஆனால் என்ன பிரச்சனை என யாராலும் ஊகிக்க முடியவில்லை. சகோதர சேஷம ராஜுவிற்கு என்ன செய்வது என புரியவில்லை. பெற்றோர்களை வரவழித்து சகோதரர் சத்தியத்தை அவர்களிடம் ஒப்படைத்தார். இத்தோடு உரவகொண்டாவில் சத்தியத்தின் படிப்பிற்கு ஒரு முடிவு ஏற்பட்டது; பழையபடி தன்னுடைய லீலைகளை புதிய ஊக்கத்துடன் செய்யத் தொடங்கினார். மறுபடியும் புட்டபர்த்தியின் தெருக்களில் பக்தி ஊர்வலங்களும், சித்ராவதி நதியின் மணற்பரப்பில் விளையாட்டுகளும் தொடங்கின.

வெகு விரைவில், சத்யநாராயணன் தன் மகிமைகளையும், தெய்வீக சக்திகளையும் உலகுக்கு வெளிப்படுத்த நிச்சயித்தார். ஒரு நாள் காலையில் எல்லோரையும் தன் வீட்டின் முன் வரும்படி அழைத்தார். தன் கை அசைப்பில் நிறைய கற்கண்டுகளை சிருஷ்டித்து அனைவருக்கும் விநியோகித்தார். பார்வையாளர்கள் அவரது தந்தை பெத்த வெங்கமராஜுவை இவ்வதிசயத்தை காண அழைத்து வந்தனர். தந்தை கோபமடைந்து, இவ்வித முட்டாள்தனமான காரியங்களை தன் வீட்டில் நடத்த அனுமதிக்க முடியாது என கையில் ஒரு தடியுடன் வெளியே வந்தார். ஸ்ரீ பெத்த வெங்கமராஜு சாயி பாபாவின் அருகில் சென்று "நீ யார்? நீ கடவுளா அல்லது ஏதேனும் ஆவி ரூபமா?" என கேட்டார். அதற்கு சத்யம் சுருக்கமாக, "**நான் சாயி பாபா**" என கூறினார். பெத்த வெங்கமராஜுவின் கையில் இருந்த தடி தானே கீழே நழுவியது. பாலகன் மேலும் இவ்வாறு கூறலானார், "**நான் உங்களுடைய சத்யம் அல்ல, நான் ஆபஸ்தம்ப சூத்திரம், பாரத்வாஜ கோத்திரத்தை சேர்ந்த சாயி பாபா. உங்களை எல்லாம்**

**கொடுமைகளிலிருந்து விடுவித்து உங்கள் வாழ்வை மேம்படுத்த அவதரித்துள்ளேன். நீங்கள் எல்லோரும் உங்கள் இல்லங்களை பரிசுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்".**

இதைக் கேட்ட சகோதரர் சேஷம ராஜு, ஸ்ரீ சாயி பாபாவின் அருகில் சென்று, "நீங்கள் அவதாரம் எடுத்த காரணம் என்ன?" என கேட்டார். அதற்கு மிகவும் தெளிவாக "உங்கள் முன்னோர் வெங்கவ தூதர், நான் தங்கள் குடும்பத்தில் அவதரிக்க வேண்டும் என பிரார்த்தனை செய்திருந்தார். அவருடைய பிரார்த்தனையை நிறைவேற்ற நான் இங்கு அவதாரம் எடுத்துள்ளேன்" என பதில் கூறினார். இதற்கு ஆதாரம் என்ன? என வினவியதும், சாயி பாபா கை நிறைய மல்லிகைப் பூக்களை அருகில் இருந்தோரிடமிருந்து எடுத்து அதை தரையில் தூவினார். மலர்கள் தாமாகவே வரிசைப் படுத்திக் கொண்டு **"சாயி பாபா"** என தெலுங்கில் அமைந்தன. எல்லோர் மனதிலும் இருந்த சந்தேகம் விலகியது. இதைக் காட்டிலும் சிறந்த ஆதாரம் என்ன இருக்க முடியும்!!!

இதற்கு பிறகு, மக்கள் கூட்டம் கூட்டமாக சாயி பாபாவை தரிசிக்க வந்து பக்தியுடன் சேவை செய்ய ஆரம்பித்தனர். குடும்பத்தினரால் இந்த கூட்டத்தை சமாளிக்க முடியாமல் திணறினர். என்ன செய்வது என்று புரியவில்லை. ஒரு நாள் பாபா அவர்களிடம், "நான் இங்கு வீட்டில் இருந்தால் அவதரித்த நோக்கம் நிறைவேறாது. ஆதலால் வேறு இடம் நோக்கி செல்கிறேன்" என கூறினார். இதைக் கேட்ட தாயார் ஈஸ்வரம்மா மிகவும் வேதனைக் கொண்டு வீட்டை விட்டு செல்ல வேண்டாம் என கெஞ்சினார். ஆனால் அவர் ஆசை நிறைவேறவில்லை. 20-10-1946 அன்று ஸ்ரீ பாபா வீட்டை விட்டு கிராமத்தில் இருந்த தோட்டத்தில் சென்று அமர்ந்தார். கலவரம் அடைந்த தாயார் அங்கும் சென்று ஸ்ரீ பாபாவை வீட்டிற்கு திரும்புமாறு பலமுறை வேண்டினார். வீட்டிலிருந்தே அவர் விருப்பப் படி பக்தர்களுக்கு வேண்டியதை செய்யுமாறும், அதற்கு எந்த தொந்தரவும் வராதவாறு தான் பார்த்துக் கொள்வதாக சொன்னார்.

தாயார் தன்னால் முயன்ற எல்லா வழிகளிலும் வீட்டிற்கு வந்து உணவு உண்ணும்படி ஸ்ரீ பாபாவை வேண்டினார். தாயாரின் விருப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டியதை தன் கடமையாக எண்ணிய ஸ்ரீ பாபா வீட்டிற்கு திரும்பி வந்தார். மகனுக்கு வேண்டிய தினசரி உணவை சமைத்து தாயார் அவர் முன் வைத்தார். அதிலிருந்து மூன்று கவளங்கள் மட்டுமே உண்டார். பிறகு எழுந்து "மாயை விலகியது. ஏன் கஷ்டப்பட வேண்டும்?" என கூறி நேரே ஈஸ்வரம்மாவின் சகோதரர் சுப்பாராஜுவின் வீட்டிற்கு சென்றார். அங்கு சற்று நேரம் இருந்து விட்டு ஸ்ரீமதி கர்ணம் சுப்பம்மாவின் இல்லம் சென்று, அதை தன் இருப்பிடமாக்கி கொண்டார்.

ஆரம்பத்திலிருந்தே ஸ்ரீமதி சுப்பம்மா ஸ்ரீ பால பாபாவின் தெய்வீக சக்தியை புரிந்து கொண்டு, அவரை கடவுளின் அவதாரமாகவே மனதார வணங்கி வந்தார். தன் வீட்டை பகவான் இருப்பிடமாக்கி கொண்டதை நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அந்த தெய்வீக வீட்டிலிருந்து பல்வேறு லீலைகளை நடத்திக் கொண்டு மக்களையும், பக்தர்களையும் சந்தோஷப் படுத்தினார்.

**முதல் அத்தியாயம் முடிந்தது**.

(மறுபடியும் பூஜை செய்ய வேண்டும். பழமும், தேங்காயும் நிவேதனமாக படைத்து விட்டு, ஆரத்தி எடுக்க வேண்டும். இது போல் ஒவ்வொரு அத்தியாய முடிவிலும் செய்ய வேண்டும்)

# ஸ்ரீ ஸத்ய ஸாயி விரத பூஜை - பாகம் 4B

## பகவானின் புனித கதை

### மஹிமா காண்டம் (ஸ்வாமியின் மஹிமைகள்)



**ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ ஸத்ய ஸாயி விரத கதை - இரண்டாவது அத்தியாயம் - மஹிமா காண்டம் - தெய்வீக செயல்கள்**

பால பகவான் ஸாயி, கர்ணம் சுப்பம்மாவின் வீட்டை இருப்பிடம் ஆக்கியதிலிருந்து, அருகில் இருந்த கிராமங்களிலிருந்து, கூட்டம் கூட்டமாக மக்கள் அவருடைய தரிசனத்தை பெருவதற்காக அந்த வீட்டை முற்றுகையிட்டனர். அதீத நம்பிக்கையுடனும், பக்தியுடனும் மக்கள் அவரை வணங்கி வந்தார்கள். பஜனைகளில் பங்கு கொண்ட பின், தம் வீட்டிற்கு மனது நிறைந்து சந்தோஷத்தோடு சென்றார்கள். சுப்பம்மாவும் மேன்மைப் பொருந்திய வளர்ச்சியைக் கண்டு, தன் நல வளத்தை நினைத்து பேரானந்தம் அடைந்தார். தன்னை சுற்றி நடப்பதெல்லாம் ஸ்ரீ பால ஸாயியின் ஆசிகளால் தான் என்பதை

நன்கு அறிந்திருந்தார். இதற்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் தன் வீட்டை பாபாவின் பக்தர்களுக்கு சந்தோஷமாக, மனதார அனுமதி அளித்தார். அவர்களது உணவு வசதிகளையும் பார்த்து வந்தார். கணக்கில்லாமல் வரும் பக்தர்களுக்கு செய்யும் சேவையைக் காட்டிலும் சிறந்தது வேறொன்றும் இல்லை என திடமாக நினைத்திருந்தார். சுப்பம்மா அவர்கள் வீட்டிற்கு வந்ததிலிருந்து, ஸ்ரீ ஸாயி தினசரி காலை, மாலை வேளைகளில் பஜனைகள் நடத்தி வந்தார்.

மக்கள் அதிகமாக ஆக, வீட்டிற்குள் இடம் போதவில்லை. ஆதலால் தெருவில் எல்லாம் அமர்ந்திருந்தார்கள். இந்த இக்கட்டான சூழ்நிலையில், சுப்பம்மா ஒரு பெரிய பந்தல் ஏற்பாடு செய்தார். பெங்களூர், அனந்தபூர் போன்ற இடங்களிலிருந்து வந்த மக்கள் தன்னுடன் தங்குவதற்கு கூடாரம் கொண்டு வந்தனர். பிறகும் இடம் பற்றாக் குறையாக இருந்தது. வரும் விருந்தினருக்கு உணவிட ஒரு பெரிய உணவகம், சமையலறை தேவையாக இருந்தது. பல சமயங்களில் தயாரிக்கும் உணவு போதுமோ போதாதோ என இருந்தது. இவ்வாறு ஐயம் ஏற்படும்போது, பிரச்சனை ஸ்ரீ பாபாவிடம் கொண்டு வரப்பட்டது. அவர் உடனே இரண்டு தேங்காய்களை கொண்டு வரச் செய்து, ஒரு தேங்காயால் மற்றொரு தேங்காயைத் தட்டி உடைத்து, நான்கு பாகங்களாக்கி, கிடைக்கும் இளநீரை சமைத்த பதார்த்தங்கள் இருந்த பாத்திரங்களில் தெளித்து வந்தார். தட்டுப்பாடு இல்லாமல் உணவு எல்லோருக்கும் பரிமாற முடிந்தது. இவ்வதிசயங்களை கண்ட மக்கள் ஸ்ரீ பாபாவின் ஆன்மீக சக்தியால் மட்டுமே இவ்வாறு நடக்க முடியும் என முடிவு செய்தனர்.

சிறிது காலத்திற்கு பிறகு, பழைய கோவில் கட்டப்பட்டு, ஸ்ரீ பாபா அதை தன் இருப்பிடமாக மாற்றி கொண்டார். சுப்பம்மாவை பொறுத்த மட்டிலும், முதுமை அடைந்தும் புனித காரியத்திற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

பால பகவான் யாரிடமும் கூறாமல் அவ்வப்போது வெளியே சென்று வந்தார். ஒரு சமயம், சுப்பம்மா தன்னுடன் சில கூட்டாளிகளை அழைத்துக் கொண்டு, பகவானைத் தேடி சென்றார். மலை மேலும், மடு மீதும் ஏறி, சித்ராவதி நதிக் கரையில் உள்ள எல்லாத் திசைகளிலும் நோக்கி தேடிச் சென்றனர். கடைசியாக, பகவான் ஆழ்ந்த சிந்தனையுடன் ஒரு இடத்தில் அமர்ந்திருந்ததை கண்டனர். அவரை வீட்டிற்கு வருமாறு கெஞ்சினர். சுப்பம்மா தாய் போன்ற நேசம் கொண்டிருந்தார். இது போல் ஸ்வாமி அடிக்கடி காணாமல் போனதால், எங்கே தங்களை எல்லாம் விட்டு வெகு தொலைவு சென்று விடுவாரோ என மக்கள் அஞ்சினர். அவர் அவதாரம் எடுத்த நோக்கம் அறியாததால், மக்கள் எதிர் காலத்தை நினைத்து கலங்கினர்.

தன் மகிமைகளால் மக்களை ஆனந்தப் படுத்துவதே தன் நோக்கமாக ஸ்ரீ பால பாபா அவதாரம் எடுத்துள்ளார். ஆதலால் தன் லீலைகளை அவ்வப்போது மக்களுக்கு காட்டி வந்தார். பல சமயம் தன் பக்தர்களை சிர்த்ராவதி நதியின் மனற்பரப்பிற்குஅழைத்துச் சென்று அங்கு பஜனைகள் நடத்துவார். அங்கிருந்த போது ஒரு முறை, தன் வாழ்க்கையின் முதல் பதினாறு ஆண்டுகளுக்கு தன் லீலைகளையும், அடுத்த பதினாறு ஆண்டுகள் தன் மகிமைகளையும், மிகுந்த வாழ்க்கை ப்ரவசனங்களுக்கும் உபதேசத்திற்கும் அர்ப்பணிக்க போவதாக கூறினார். மணற்பரப்பில் தன் மஹிமைகளையும், புனிதமான நோக்கங்களையும் ஸ்ரீ பால பகவான் பல முறை காண்பித்து வந்தார். அக்கட்சிகளைக் கண்ட சில பாக்கியசாலிகள் இன்றளவும் நம்மிடையே இருந்து வருகிறார்கள். ஒரு நாள், நதிக்குச் செல்லும் பாதையில் உள்ள ஒரு குன்றின் உச்சிக்கு தன் பக்தர்களை அழைத்துச் சென்றார். இப்பொழுது கல்பவ்ருக்ஷம் ( நினைத்ததை தர கூடியது) என்ற பெயர் பெற்ற ஒரு புளிய மரத்தின் கீழ் அமர்ந்து, பக்தர்கள் விரும்பிய பழங்களை சிருஷ்டித்துக் கொடுத்தார். அம்மரத்தின் மீதிருந்த பழங்களை ஒன்றொன்றாக பறித்து அதை மாம்பழம், ஆரஞ்சு பழம், கொய்யாப்

பழம், நாவல் பழம் முதிலியவைகலாக மாற்றி பக்தர்களுக்கு கொடுத்தார். இதுவே இவரின் அளவில்லா தெய்வீக சக்தியாகும்.

ஒரு முறை, பக்தர்களை கீழே மணலில் விட்டுவிட்டு, தான் மட்டும் ஒரு குன்றின் மீது ஏறி நின்றார். அங்கிருந்தபடியே கீழே இருந்த பக்தர்களை மேலே பார்க்கச் சொன்னார். அவர் தலையைச் சுற்றி ஒரு ஒளிவட்டம் திகழ்வதை பக்தர்கள் கண்டனர். அவ்வப்போது முன்நெற்றியில் மின்னல் போன்ற தெய்வீக ஒளிக்கீற்றையும் கண்டனர். நிமிட நாழிகையில் அவை மறைந்து ஸ்ரீ ஷிர்டி பாபாவாக தென்படுவார். பௌர்ணமி இரவுகளில் அவரது தெய்வீக முகம் சந்திரனின் மத்தியில் தென்படும். ஒரு முறை, நதியின் கரையை விட்டு மரங்கள் அடர்ந்த ஒரு புதருக்குள் ஸ்வாமி சென்றார். அங்கு கனத்த கயிறுகளை மரக்கிளைகளில் கட்டி ஊஞ்சல் அமைத்தார். ஊஞ்சலில் அமர்ந்து வீசி வீசி ஆட ஆரம்பித்தார். இதை பக்தர்கள் கண்டு களித்தனர். சட்டென தன்னை கூர்ந்து நோக்குமாறு பக்தர்களுக்கு ஆணையிட்டு, அவர் ஊஞ்சலில் மிக உயரத்திற்கு செல்வார். இதைப் பார்த்திருந்த பக்தர்களுக்கு பிருந்தாவன பால கோபாலனாக, மலர் சொரிந்த ஊஞ்சலில் காட்சி கொடுத்தார். இம்மஹிமைகளை இதுவரை கண்டிடாத சிலர், மயக்க நிலைக்குச் சென்றனர். உடனே அக்ஷதை சிருஷ்டித்து, அப்பக்தர்கள் மீது தூவி அவர்களின் மயக்கத்தை தெளிவு செய்ய வைத்தார்.

ஒரு முறை கமலாபுரத்திலிருந்து வந்த ஒரு பக்தர் கூட்டத்திடம், ஸ்ரீ கிருஷ்ணரின் புல்லாங்குழல் இசையைக் கேட்க விருப்பமா என வினவினார். பிறகு அவர்களின் தலைகளை தன் நெஞ்சோடு இணைத்து இசையைக் கேட்கும்படி பண்ணார். மக்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டன. ஸ்ரீ ஸாயி பகவான் சாட்சாத் ஸ்ரீ பரப்ரும்ம சச்சிதானந்த மூர்த்தி தான் என்பதில் ஒரு சந்தேகமும் இல்லை. ஒவ்வொரு இச்சைகளை தெரிந்து கொண்டு, அதை பூர்த்தி செய்து எல்லோரையும் ஆனந்தக் கடலில் மூழ்க வைத்தார். தன்

பக்தர்களிடம் அவர் காட்டிய அளவில்லா அன்புக்கும், கருணைக்கும் இது ஒரு எடுத்துக்காட்டு.

ஸ்ரீ ஸாயி பகவானின் பெயரும், புகழும் பல நாடுகளுக்கு பரவ ஆரம்பித்தன. ஷிர்டி ஸாயி பாபாவே பர்த்தியில் மறு அவதாரம் செய்திருக்கிறார் என பல அற்புதமான நிகழ்வுகளை பற்றி பேச தொடங்கின. அவர் தன் லீலைகளையும், மகிமைகளையும் எடுத்துக்காட்டி, நோயுற்றவரை குணப்படுத்தி, துன்பத்தில் இருக்கும் மக்களுக்கு தீர்வளிக்கிறார் என பலரும் சொன்னார்கள். மக்கள் ஆயிரக்கணக்கில் அவரை தரிசிக்க புட்டபர்த்தி வந்தன. எல்லோரையும் அன்புடன் இரு கரங்களை நீட்டி வரவேற்றார். மக்களின் துயரக் கதைகளை கேட்டு அவர்களுக்கு ஆறுதல் அளித்தார். எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்துவிட்டு சென்றார்கள். நாள் முழுவதும் பல சேவைகளை செய்து மக்களை அன்பு கடலில் மூழ்க வைத்தார். நெருங்கிய நண்பர்களிடம் தன்னை வருத்திக் கொள்ளாமல் எல்லாவற்றையும் சாதாரணமாக எடுத்துக்கச் சொல்லி உபதேசித்தார். துன்பங்களை செவி கொடுத்து கேட்டார். மக்கள் எல்லோரும் என்னை தேடி வந்து பார்ப்பதின் காரணமே துன்பங்கள் இருப்பதால் தானே. அவர்களின் துயரங்களை நீக்குவதே என் முதல் நோக்கம் என்று சொற்பொழிவாற்றினார். துன்பம் தீர்ந்தால் அவர்கள் பக்தியுடன் பஜனை செய்ய முன் வருவார்கள் என கூறினார். இதுவும் தன் கடமைகளில் ஒரு திட்டமாகும் என்று உறுதியளித்தார். எல்லா மூலைகளிலிருந்தும் மக்கள் அவரைத் தேடி வர தொடங்கினார்கள். பலர் அவரை கிராமங்களுக்கு வரச் சொல்லி அழைப்பு விடுத்தனர். அவர்களை திருப்தி செய்ய பலமுறை அங்கும் சென்று வருவார். மக்கள் தங்களுடைய பாக்கியமாக கருதி விருந்தோம்பல் செய்தனர்.

ஒருமுறை வெகு நாட்களாக குடல் புண்ணால் அவதிபட்டுக் கொண்டிருந்த ஒரு பக்தரை ஸ்வாமி சந்தித்தார். தன் கையசைப்பில் அறுவை சிகிச்சைக்குரிய ஆயுதங்களை வரவழைத்து அவருக்கு

அறுவை சிகிச்சை செய்து வியாதியிலிருந்து குணப்படுத்தினார். அப்பக்தர் பேரானந்தத்துடன் வீடு சென்றார். ஸ்வாமியின் மகிமைகளை பார்த்து கூட்டம் கூட்டமாக மக்கள் திரண்டு வந்தனர்.

ஸ்ரீ சத்ய ஸாயி பகவான் எப்பொழுதும் தன் பக்தர்களிடம் “யாமிருக்க பயமேன்?” என்று கூறுவார். நான் எங்கிருந்தாலும் உங்களைத் தவறாமல் காத்து வருவேன் என கூறி தைரியப்படுத்தினார். ஒரு முறை மச்சிலிப்பட்டணம் என்ற ஊரின் ஒரு கடலோர நகரத்தில் தன் பக்தர்களுடன் நடந்து கொண்டிருந்தார். திடீரென்று பக்தர்களை விட்டுவிட்டு கடலுக்குள் நடந்து சென்றார். ஏதோ சத்தம் கேட்டு மக்கள் அப்பக்கம் பார்க்க தொடங்கினார்கள். நடுக்கடலில் எல்லோரும் சேஷ சாயியின் (பகவான் விஷ்ணு) உருவத்தை கண்டனர். (பாம்பின் மேல் பள்ளிக்கொண்டிருந்தார்) ஆதிசேஷனை கண்டு மகிழ்ந்தனர். ஒரு நிமிட நாழிகைக்கு தெளிவாக தென்பட்டது. அடுத்த நிமிடம் பக்தர்கள் ஸ்ரீ ஸாயி பகவானை தன் அருகில் கண்டனர். இத்தகைய நிகழ்ச்சியைக் கண்டு மக்கள் ஆனந்தத்தில் மூழ்கினர். நம்மிடையே நடந்து வரும் பகவான் சாக்ஷாத் விஷ்ணு பகவான், எவ்வகையிலும் மாறுபட்டவர் இல்லை என புரிந்து கொண்டனர். பகவானே ஆதிசேஷன் மீது சயனம் செய்திருந்தார் என்ற காட்சியை நினைவுப்படுத்தி மகிழ்ந்தனர்.

யாதொரும் தயக்கமுமின்றி பக்தியுடனும், நம்பிக்கையுடனும் யாரெல்லாம் ஸாயி பகவானிடம் சரணடைகின்றார்களோ அவர்களை பகவான் கண்டிப்பாக பாதுகாத்து அருள் புரிகின்றார். அவர் திவ்ய அவதாரத்தின் மகிமையை புரிந்து கொள்ளாதவர்கள், அவரை பார்க்க சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள், அவர் பெயரை கூட கேட்காதவர்கள் - இவர்களுக்கும் அவருடைய கருணையும் ஆசிகளும் கிடைக்கின்றன.

ஒரு முறை, பகவான் மோட்டார் வண்டியில் நெடு தூரம் பயணம் செய்தார். போகும் வழியில் ஒரு பெண்மணி இடுப்பில் குழந்தையுடனும், தலையில் கனமான சாமான்களை வைத்துக்

கொண்டு கிராமத்திற்கு சென்று கொண்டிருந்தாள். ஸ்ரீ பகவான் வண்டியை நிறுத்தி அப்பெண்மணியை அருகில் அழைத்தார். அவளுக்கு கொஞ்சம் பணமும், தின்பண்டங்களும் கொடுத்து தீபாவளிப் பண்டிகையை சந்தோஷமாக கொண்டாடும்படி கூறினார். பிறகு அவளிடம், "புட்டபர்த்தி ஸாயி பாபா என்ற பெயரை கேட்டிருக்கிறாயா" என வினவினார். அவர் பெயரை கேட்டிருப்பதாகவும், ஆனால் பார்த்ததில்லை எனவும் பதில் கூறினாள். சிறு புன்னகையுடன் பகவான், "நானே ஸாயி பாபா" என்று கூறிவிட்டு பயணத்தை தொடங்கினார். எல்லா மனிதர்களையும் சமமாக பார்க்கிறார் என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் வேண்டுமா? இதையே வேதங்கள் பல காலங்களாக சொல்லி வருகின்றன.

பகவான் பாபா ஆழம் காண முடியாத கருணைகடல். அவரின் மகிமைகளை யாராலும் அளவிட முடியாது. பகவானின் அவதாரம் தர்மத்தை நிலைநிறுத்தி, மனித இனத்தையும், எல்லா உயிரினங்களையும் காப்பாற்றுவதற்காக எடுத்தது ஆகும். சத்தியத்தின் அவதாரம் ஆன அவர் பக்தர்களின் குரலுக்கு உடனே பிரத்யக்ஷமாக ஆசி அளிக்கிறார். ஒரு அழகான சம்பவத்தை பற்றி குறிப்பிட விரும்புகிறோம்.

ஒரு முறை சில பக்தர்கள், அவர் பிறந்த நாள் விழாவிற்கு பர்த்தி செல்லாமல் தங்கள் ஊரிலேயே கொண்டாட விரும்பினார்கள். எல்லா ஏற்பாடுகளையும் செய்து, பெரிய படங்களை புஷ்பங்களாலும், மாலைகளாலும் அலங்கரித்து பூஜைக்கு ஏற்பாடு செய்தார்கள். பூஜை நல்லபடியாக முடிந்து பஜனை ஆரம்பித்தார்கள். அதே நேரத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் புட்டபர்த்தியில் பிறந்த நாள் விழாவிற்காக கூடினர். பகவான் அவர்கள் இடையே சிரித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் இருந்தனர். அதே சமயம், அவர் திடீரென தொலைவில் இருந்த பக்தர்கள் பஜனை செய்யும் இடத்திற்கு சென்றார். அவர்கள் அலங்கரித்த படங்களின் இடையே

வலது பக்கமாக தன் சிறிய உருவத்தில் நின்று கொண்டிருந்தார். சிவந்த நிற உடைகளுடன் ஒரு வெண்குதிரை மீது அமர்ந்திருப்பதை அங்கிருந்த பக்தர்கள் அனைவரும் கண்டனர். குதிரை ஒரு அங்குல அளவே இருந்தது. அதற்கு மேல் பகவான் ஒரு அங்குல அளவுக்கு கரங்களை உயர்த்திக் கொண்டு பக்தர்களுக்கு ஆசி வழங்கியவாறு காட்சியளித்தார். இக்காட்சி மூன்று நிமிட நேரத்திற்கு தெரிந்தது. அன்று எடுத்த புகைப்படங்கள் இன்று வரை இருக்கின்றன. பர்த்தியில் இருந்த பக்தர்கள் ஸ்வாமி தங்களிடமிருந்து விலகி அங்கு சென்று வந்ததை உணரவே இல்லை. தொலைவில் பஜனை செய்து கொண்டிருந்த பக்தர்கள் பகவான் தாங்கள் இருக்கும் இடத்திற்கு வந்ததை சிறிதும் எதிர்ப்பார்க்கவில்லை. ஆனால் எதிர்பாராமல் பகவானின் திரு உருவத்தை பூமாளைகளுக்கு இடையே பார்த்த அனைவரும் பேரின்பத்தில் மூழ்கி இருந்தார்கள். இந்த சம்பவம் ஒரு சிறிய உதாரணம் தான்.

பிறந்த நாள் முடிந்து நான்கு நாட்களுக்குப் பிறகு கூட கிராமத்திலிருந்து கூட்டம் கூட்டமாக மக்கள் புட்டபர்த்திக்கு வந்தார்கள். அவர்களை கண்டதும் ஸ்வாமி புன்சிரிப்புடன் அவர்களை வரவழைத்து, “நீங்கள் பக்தியுடன் ஆசையாக பிறந்த நாளை கொண்டாடினதால், நான் அவசர அவசரமாக வெண் குதிரையின் மீது அமர்ந்து அங்கு வந்து காட்சி அளித்தேன்” என்றார். இதைக் கேட்ட பக்தர்கள் தாங்கள் கூற நினைத்ததெல்லாம் பகவானே கூறிவிட்டாரே என நினைத்து பரம ஆனந்தத்துடன் திரும்பி கிராமத்திற்கு சென்றார்கள். இம்மகிமைகள் எல்லாமே அவர் நாடகத்தில் ஒரு சிறு துளி தான். சந்தோஷத்தையும், மன நிம்மதியையும் அளிப்பதுதான் பகவானின் முக்கிய லட்சியமாகும். ஆபத்தில் கஷ்டப்படும் மக்களை வெவ்வேறு உருவங்களில் வந்து ரட்சிக்கிறார். பல தீய சக்திகளை தண்டித்தும் உள்ளார்.

இந்த அவதாரத்தின் முக்கிய லட்சியம் மக்களை தீய வழிகளிலிருந்து திசை திருப்பி நல்லவர்களாக மாற்றுவது தான்.

துன்பப்படுவர்களின் துயரத்தை நீக்கி, இன்பம் அளிப்பது தான் அவருடைய குறிக்கோளாக இருந்தது. நடமாடும் தெய்வத்தை கண்ட நாம் எல்லோருமே பாக்கியசாலிகள்.

உலகில் உள்ள மக்கள் எல்லோரும் இந்த ஸாயி விரதத்தை பக்தியுடன் செய்து பகவானின் அன்பும், ஆசிகளும் பெற்று பரிபூர்ண சந்தோஷத்தை பெற வேண்டும்.

**இரண்டாவது அத்தியாயம் முடிந்தது.**

மறுபடியும் பூஜை செய்து, தேங்காயோ, பழமோ நைவேத்தியமாக அளித்த பின் கதை தொடரும்.

# ஸ்ரீ ஸத்ய ஸாயி விரத பூஜை - பாகம் 4C

## பகவானின் புனிதமான கதை

### 3வது அத்தியாயம் - ரக்ஷா காண்டம் (பகவானின் லோக ரக்ஷை)




**ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ ஸத்ய ஸாயி விரத கதை - 3வது அத்தியாயம் - ரக்ஷா காண்டம்:**

பகவான் ஸத்ய ஸாயியின் லீலைகளும், மகிமைகளும் கணக்கில் அடங்காதது: விவரிக்க இயலாதது. அவரது கதை ஆழ்கடலை போன்றது; மிகவும் ரஞ்சகமானது. மானஸீகமாக படித்தாலே பக்தர்களுக்கு சகல பாக்கியங்களும் கிட்டும். ஸ்ரீ ஸாயி பகவானின் கதை புனித சிந்தாமணி போன்றது. அவரது குணாதிசயங்களே முக்தி, ஞானம், வைராக்கியம் ஆகியவைகளை கொடுக்க கூடியது. அவர் மீது அன்பும், பக்தியும் கொண்ட பக்தர்களுக்கு வறுமை கடந்த

காலம் போன்றது. பக்தர்கள் மன நிம்மதி அடைந்து, இக பர சுகங்களை பெறுவார்கள். ஸ்வாமி ஆழ்கடல் போன்று அன்புக் கொண்டு, பக்தர்களிடம் கருணையும், அக்கறையும் கொண்டவர். ஸாயி பகவானே பரப்ரஹ்மம் ஆனதால் பக்தர்கள் அறியாமல் செய்த பிழைகள் எல்லாவற்றையும் மன்னித்து அருள் செய்வார். ஒவ்வொரு பக்தனையும் ஆழ்ந்த அன்பு உள்ளவரா இல்லையா என்பதை சதா எடைப் போடுவார்; உலகத்தை தீய சக்திகளிடமிருந்து காக்க மனித ரூபமாக அவதாரம் எடுத்த பரப்ரஹ்மம்.

வண்டானது பூவில் உள்ள தேனையும், மகரந்தத்தையும் விட்டு அகலாதது போல் பக்தரும் அவரிடம் சரணாகதி அடைய வேண்டும். அவரது அருளால் நமக்கு சற்று அறிவு புலப்படும். அவரது பார்வையே பக்தர்களின் துயரங்களை (நீக்கக்கூடிய) அழிக்கக்கூடிய சக்தி கொண்டது. அவரது லட்சியமே துன்பப்படுபவர்களின் துன்பம் தீர்த்து அமைதியை தருவது ஆகும். அப்படி இருக்கும் போது சரணடைந்தவர்களை அவர் நிர்க்கதியாக விட்டு விடுவாரா?

ஒரு முறை, ஸாயி பக்தர் ஒருவருக்கு உடல் நிலை கவலைக்கிடமாகியது நோயாளியின் மருமகனே மருத்துவராக இருந்ததால் அவருக்கு சிகிச்சை அளித்தார். இருந்தாலும் ஜுரம் அதிகமாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். எல்லா விதமான கவனிப்பும் இருந்தும் அவரது உடல் நிலைமை கவலைக்கிடமாகி மோசமாகியது. மருத்துவர்கள் தன்னால் இயன்றவரை சிகிச்சை அளித்தும் பயன் இல்லை என கை விட்டனர். நோயாளியின் தாயார் மிகவும் மன வருத்தம் கொண்டார். மகனின் தலையணைக்கடியில் ஸ்வாமியின் உருவப்படத்தை வைத்து விட்டு, சிறிது சிறிதாக விபூதியைப் பிரசாதமாக நெற்றியில் இட்டு, வாயிலும் போட்டுக் கொண்டிருந்தார். தாயாருக்கு ஆறுதல் அளிப்பது சற்று கடினமாக இருந்தது.

நாள் முழுவதும் அழுதுக் கொண்டே பகவானிடம் தன் மகனை காப்பாற்றும்படி வேண்டி கொண்டிருந்தார்; புத்திர பிக்ஷை கேட்டு

கொண்டிருந்தார். நோயாளியின் உறவினர் மற்றும் அலுவலக நண்பர்கள் அவரை காண மருத்துவமனைக்கு வந்த வண்ணம் இருந்தனர். எல்லோரும் நம்பிக்கை இழந்து விட்டனர். மருத்துவர்களும் இனி எந்த சிகிச்சையும் பயன்படாது என எண்ணி வேறு அறைக்கு அவரை மாற்றினர். நோயாளியின் அறைக்கு வெளியே தாயாரும், நண்பர்களும் கவலையுடன் நின்று கொண்டிருந்தனர்.

சமயம் நடுநிசி பன்னிரண்டு மணியாக இருந்தது. தனிமையில் இருந்த நோயாளிக்கு ஸ்ரீ ஸத்ய ஸாயி பகவான் சொப்பன தரிசனம் அளித்தார். பகவான் நோயாளியிடம், "இன்றிலிருந்து நீ புதிய மனிதனாகப் போகிறாய்" என கூறி மறைந்தார். காலை பொழுது விடிந்தவுடன் நோய் மறைந்துவிட்டது; நோயின் அறிகுறிகளும் மறைந்து விட்டன. அவரை காண வந்த மருத்துவர்கள் நம்பிக்கையில்லாமல் ஆச்சரியம் அடைந்தனர். "இவ்வளவு சீக்கிரம் நோய் எவ்வாறு மறைந்தது? இது ஏதோ அற்புதம் நடந்து, தங்களை காப்பாற்றியது போல் தோன்றுகிறது" என கூறி நோயாளியை வேறு அறைக்கு முன் போல் மாற்றினார்கள். தாயார் கவலைத் தீர்ந்து ஆனந்தம் அடைந்தார். கடவுள் தன் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டு புத்திர பிக்ஷை அளித்ததாக கருதினார். உற்றாரும், மற்றவரும் சந்தோஷம் அடைந்தனர்.

நோயாளி பூர்ண குணம் அடைந்தவுடன் பகவானுக்கு மரியாதை செலுத்த புட்டபர்த்திக்கு சென்றார். பரிபூர்ண அன்புக் கடலான ஸ்வாமி நோயாளியை தன் முன் அழைத்து, "நீ உண்மையில் இறந்து விட்டாய். உயிர் பிச்சை பெற்று என்னை இன்று காண வந்திருக்கின்றாய்" என கூறி ஆசி வழங்கி வழி அனுப்பினார். தக்க சமயத்தில் வந்து, காப்பாற்றி ஆசி வழங்கிய பகவானின் செயலை நினைத்து, தன் நன்றியை, மரியாதையை செலுத்திவிட்டு ஒரு சந்தோஷ பிறவியாக அந்த மனிதர் வீடு திரும்பினார். இந்நிகழ்ச்சியில் நோயாளியை தொடாமலே, எந்த வித பிரசாதமும்

கொடுக்காமலே இறப்பிலிருந்து நோயாளியை பிழைக்க வைத்தார். இத்தகைய வல்லமை படைத்தது இந்த அவதாரத்தின் செயல்கள். எந்த நிமிடம், எந்த இடத்தில், எவருக்கு, எந்த வகையில் பகவான் அருள் செய்வார் என்பது வர்ணனைக்கு அப்பாற்பட்டது. இதை யாராலும் குறிப்பிட்டு சொல்ல இயலாது. தற்சமயம், ஸ்ரீ ஸத்ய ஸாயி அவதாரத்தில் நிகழ்த்தும் அற்புதங்கள் நம்ப சற்று கடினமானது. வேறு எந்த அவதாரங்களும் இத்தகைய அற்புதங்களை வெளிப்படுத்தியதில்லை. பக்தர்களுக்கு மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு எந்த பாகுபாடுமின்றி பகவான் தன் மகிமைகளையும், அன்பையும் பொழிகின்றார்.

கர்நாடகாவின் “கூர்க்” என்னும் பிரதேசத்தில் ஒரு ஜமீந்தார், ஸாயி பக்தராக இருந்தார். அவரது பண்ணையில் ஓர் ஏழைப்பெண் வேலை செய்து வந்தாள். அவளது கணவரும், மாமியாரும் அப்பெண்ணை திட்டிக் கொடுமைப் படுத்தினர். இருவருக்கும் இடையில் அகப்பட்டு, துயரங்களைச் சொல்லி வருந்த ஆள் இல்லாமல், அவள் மிகவும் வேதனையுடன் நாட்களைக் கடத்தி வந்தாள். அவளுக்குப் பிறந்த குழந்தையும் இறந்ததனால், வேறு குழந்தை இல்லை என இதற்கும் மாமியார், இப்பெண்ணை பழி சுமத்தி கொடுமைப் படுத்தினார். கணவர் அந்த பெண்ணுக்கு எந்த ஆதரவும் கொடுக்காமல் தாயாரின் சார்பாகவே பேசி வந்தான். இத்தகைய சூழ்நிலையில் ஒரு பெண்ணால் என்ன செய்ய முடியும்? தாங்க முடியாமல் அந்தப் பெண் தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்து ஒரு சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தாள்.

ஒரு நாள், அவள் கணவரும், மாமியாரும் பக்கத்து ஊர் திருவிழாவிற்கு சென்றிருந்தார்கள். அவள் தேடிய சந்தர்ப்பம் கிடைத்தது. ஒருவருக்கும் வெளிப்படுத்தாமல் ரகசியமாக தன் கஷ்டங்களுக்கு தீர்வு காண முடிவுச் செய்தாள். காலை ஒன்பது மணிக்கு அவளுக்கு ஒரு கயிறு கிடைத்தது. உத்தரத்தில் கையிற்றை கட்டி, கழுத்தில் தூக்கு மாட்டி இறக்க முடிவு செய்தாள்.

திடீரென்று கழுத்து சுருக்கு அவிழ்ந்து அவளைக் காப்பாற்றியது. மறுமுறையும் ப்ரயத்தனம் செய்தாள். இம்முறை உத்தரத்தில் இருந்த கயிறு அவிழ்ந்து அப்பெண் கீழே விழுந்தாள். சுருக்கு கழுத்தில் அழுத்தியதால் காயம் அடைந்து ரத்தம் வரத் தொடங்கியது. அச்சமயத்தில் திடீரென அவள் ஒரு ஒளியையும் காட்சியையும் கண்டாள். மஞ்சள் நிற உடையுடன் ஸ்ரீ ஸாயி பகவான் புன்னகையுடன் அவள் முன் காட்சி அளித்தார். அவள் இதுவரை ஸாயியை கண்டதில்லை. ஆனால் ஜமீந்தார் வீட்டு பஜனையின் போது அவரது உருவப்படத்தை கண்டிருக்கிறாள். ஆதலால் தன் முன் காட்சி அளிப்பது ஸ்ரீ ஸாயி பகவான் எனப் புரிந்து கொண்டாள். அவர் கால்களில் பணிந்து அவள் தன் கஷ்டங்களை சில கணங்களுக்கு மறந்தாள். அந்த சமயம் அருகில் இருந்த வீட்டிலிருந்து ஒரு பெண்மணி அவள் வீடு நோக்கி வந்தாள்.

வீட்டுப் பெண்மணியின் கழுத்திலிருந்து ரத்தம் வருவதைக் கண்டு அவள் அதிர்ச்சியடைந்து, நடந்ததைப் பற்றி விசாரித்தாள். மறைக்க முடியாமல் அவள் நடந்தவற்றை கூறினாள். அதாவது தான் தூக்கில் தொங்க முயற்சி செய்த போது, பகவான் ஸாயி தன்னைக் காப்பாற்றி விட்டார் என கூறினாள். அவள் இவ்விஷயத்தை ஜமீன்தாரிடம் கூறினால், அவர் தன்னை வேலையை விட்டு நீக்கி, அவர்கள் குடும்பத்தையும் பண்ணையிலிருந்து வெளியேற்றி விடுவாரோ என பயந்தாள். அன்றிரவு ஸ்ரீ ஸாயி பகவான் ஜமீன்தாரின் மனைவி கனவில் தோன்றி, அவர்கள் பண்ணையில் வேலை செய்யும் பரிதாபமான பெண்ணை தூக்கில் தொங்குவதிலிருந்து காப்பாற்றியதை கூறி, அந்த பெண்ணை சரியாக கவனிக்காமல் இருந்ததற்காக ஜமீன்தாரிணியை கடிந்து கொண்டார். தன் கணவரிடமும் மாமியாரிடனும் அவள் படும் துயரத்தைக் கூறி, அப்பெண் ஒரு துயர முடிவு எடுத்ததையும், அதிலிருந்து தான் அவளை மீட்டது பற்றியும் கூறினார். ஜமீந்தாரிணியின் கவனக் குறைவினால் தான் தலையிடும்படி ஆனது என்றார்.

கடவுளின் எச்சரிக்கை பெற்ற ஜமீந்தாரிணி அப்பெண்ணின் கணவரை அழைத்து, நடந்த விவரங்களை கூறி, எவ்வாறு பகவான் ஸாயி அவர் மனைவியைக் காப்பாற்றி மீட்டுக் கொடுத்தார் என்பதையும் கூறினாள். இவ்விஷயம் பண்ணை முழுவதும் பரவியது. எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த, கருணையுள்ள ஸ்ரீ ஸாயி எவ்வாறு துயரங்களை தீர்க்கிறார் என எண்ணி எல்லோரும் கொண்டாடினர். அப்பெண்ணின் கணவரும், மாமியாரும், கடவுளே தன் மருமகளின் உயிரை காப்பாற்றியதால், இனி அவள் இறக்கக் கூடாது என எண்ணி அப்பெண்ணை அன்புடன் நடத்தி குடும்பத்தில் அமைதியைப் பெற்றனர்.

இந்த அவதாரத்தில் இது போன்று நடந்த நிகழ்ச்சிகள் கணக்கில்லாதவை. மற்றுமொரு நிகழ்ச்சிக்கு செல்வோம். ஒரு சுகாதார அதிகாரியின் மனைவி ஒரு முறை முடக்கு வாத நோயால் பல காலமாக அவதிப்பட்டு வந்தார். இடுப்புப் பகுதியில் தாக்கம் இருந்ததால், அவர் சரியாக எழுந்து நடக்க முடியாமல், அசைய முடியாமல் மிகவும் அவஸ்தைப் பட்டார். குழந்தைகளும் பல இருந்ததால், மிகவும் துயர நிலையில் இருந்தார். பல இடங்களில் பல விதமான சிகிச்சைகள் அளித்தும், பயன் எதுவும் இருக்கவில்லை. என்ன செய்வது என்று புரியாத கணவர் ஸ்ரீ ஸாயி பகவானின் தரிசனத்திற்காக புட்டபர்த்தி செல்ல எண்ணினார். ஸ்ரீ ஸாயி அவரைத் தன் முன் அழைத்து, "இந்த சின்ன விஷயத்திற்காக கவலைப்பட வேண்டாம்" என கூறி விரல்களினால் "டக் டக்" என சொடக்கு இட்டு, அவரின் மனைவியை அது போல் குணப்படுத்துவதாக கூறினார். இவ்வார்த்தைகளைக் கேட்ட கணவர் சற்று நிம்மதி அடைந்து ஊர் திரும்பினார். ஸ்ரீ பகவானின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து காத்திருந்தார். நாட்கள் கடந்து செல்ல செல்ல, அக்கணவர் துயரமுற்றார். மூன்று மாதங்கள் இதுபோல் ஒரு விதமான பயனும் இல்லாமல் கடந்தன.

நம்பிக்கை ஊசலாட ஆரம்பித்தது. அவருக்கு வேலைக் காரணமாக ஊருக்கு செல்ல வேண்டியிருந்தது. தன் மனைவியையும், குழந்தைகளையும், அத்துடன் அலுவலக வேலைகளையும் கவனிப்பது அவருக்கு சற்று கடினமாக இருந்தது. ஸ்ரீ ஸாயி பகவானின் அருளுக்காக அவர் காத்திருந்தார். வெளியூர் செல்ல சில ஏற்பாடுகளை செய்ய நினைத்து அவர் தன் அறைக்குச் சென்றார். அந்த சமயம் ஸ்ரீ ஸாயி பகவான் அவர் மனைவியிருந்த அறைக்குள் நுழைந்து, அவருக்கு காட்சி கொடுத்து, அவரை படுக்கையிலிருந்து எழுந்து நடந்து தன் பாதங்களில் பணியச் சொன்னார். விடியற்காலையில் ஸ்வாமியின் தரிசனம் கண்டு அப்பெண்மணி ஆனந்தமடைந்தார். தன் உடல் நிலையைப் பற்றி மறந்து, எழுந்து நின்றார். அச்சமயம் "டக் டக்" என விரல்களால் சொடக்கு இட்டது போன்ற சத்தம் கேட்டது. அப்பெண்மணி மிகவும் சந்தோஷம் அடைந்து, குனிந்து ஸ்வாமியின் பாதங்களில் பணிந்தார். எழுந்து சுற்றும் முற்றும் நோக்கிய போது, ஸ்வாமி அங்கு தென்படவில்லை; மறைந்திருந்தார். தன் உடல் சாதாரணமாக இருப்பதை எண்ணி வியப்புற்று, வெளியே செல்லும் தன் கணவருக்கு காப்பி கலந்துக் கொடுக்க சமையல் அறைக்கு வேகமாகச் சென்றார். தன் வேலைகளை முடித்த கணவர் மனைவியைக் காண அவரது அறைக்குச் சென்றார். அவர் படுக்கையில் இல்லை. சமையல் அறையிலிருந்து சத்தம் வருவதைக் கேட்டு அவர் அங்குச் சென்றார். அங்கு தன் மனைவி வழக்கம் போல் காரியம் செய்வதைக் கண்டு, விவரங்களைக் கேட்டார். மனைவி காலையில் நடந்த நிகழ்வுகளைக் கூறினார். ஸ்ரீ ஸாயி பகவான் தரிசனம் கொடுத்ததையும், "டக் டக்" என கேட்ட சத்தத்தையும், தான் ஸ்வாமியின் பாதங்களில் பணிந்ததையும் கூறினார். ஸாயியின் அருளால், வெகு நாட்களாக துன்புறுத்திய வியாதி கை விரல்களால் சொடக்கு இட்டது போன்று மறைந்ததை எண்ணி, இருவரும் சந்தோஷம் அடைந்து ஸ்வாமிக்கு அஞ்சலி செலுத்தினர்.

உலக மக்களை காக்கும் எண்ணத்துடன் அவதாரம் எடுத்த இந்த அன்புப்பெட்டகம் எந்த சமயத்தில் தலையிட்டு, யார் துன்பத்தை தீர்ப்பது என்பதை நன்கு அறிவார். எவர் துன்பம் தீர்வு அடைய வேண்டுமோ, அன்னாரின் கனவில் தோன்றி, அத்துன்பத்தை தீர்த்து வைப்பார். ஸ்வாமி முகமூடி நடனம் செய்யும் திறமை உள்ளவர். சூழ்நிலைக்கு தகுந்தவாறு, வேடம் ஏற்று நாடகம் நடத்துவார். பார்ப்பவர்களுக்கு ஸ்வாமிக்கு எதுவும் தெரியாது எனத் தோன்றும், ஆனால் அவர் மாயையிலிருந்து வெளிப்பட்டவர். அவர் மக்களை மாயையில் ஆழ்த்தி, வேடிக்கை பார்ப்பார். பொம்மலாட்ட நூல் போன்று, கயிறுகளை இழுத்து, மக்களை பொம்மலாட்டத்தில் ஈடுபடுத்துவார். இதுவே அவரது லீலை. மாயையின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள பக்தர்கள் முயற்சி செய்ய வேண்டும். பக்தியுடன் ஸ்ரீ ஸாயி பகவானைப் பிரார்த்தித்து, அவரது புகழ் பாடி, த்யானத்தில் ஈடுபட வேண்டும். நற்செயல்களைச் செய்து, கடவுளின் அருளைப்பெற முயற்சி செய்ய வேண்டும். எங்கும் நிறைந்த ஸ்ரீ ஸாயியின் ஜோதி பரிபூர்ணமானது; உடைக்க முடியாதது; எங்கும் பரவி உள்ளது. அவருடைய ரக்ஷா காண்டம் (காப்பாற்றி ரக்ஷிப்பது) திசை காணாதது.

ஒரு சிறுவனை இறப்பிலிருந்து காப்பாற்றிய சம்பவம் ஒன்றைப் பார்ப்போம். ஒரு செல்வந்தருக்கு இரண்டடுக்கு மாடி கொண்ட ஒரு பங்களா இருந்தது. ஒரு நாள், தாய் குழந்தைகளை மொட்டை மாடியில் விளையாட விட்டு பார்த்துக் கொண்டிருந்தார். அவரது மூத்த மகனுக்கு நான்கு வயது. விளையாட்டு வேகத்தில் அச்சிறுவன் பின் நோக்கி ஓடி மொட்டை மாடியின் விளிம்பிற்கு வந்து, தவறி ஐம்பதடி கீழே பூமியில் விழுந்து விட்டான். சரியாக அதே தருணத்தில், ஸ்ரீ பகவான் அந்த சிறுவனை தன் கைகளில் ஏந்தி, கீழே புற்கள் நிறைந்த இடத்தில் கிடத்தி விட்டு மறைந்தார். இதற்கிடையில் தாயார் குழந்தையை காணாமல் தேட ஆரம்பித்தார். அவர்கள் வீட்டு வேலைக்காரன் குழந்தை கீழே விழுவதை பார்த்து விட்டு, குழந்தையை எடுத்துக் கொள்ள வேகமாக வெளியே வந்தார்.

தாயாரும், படி எறங்கி கீழே வந்து கொண்டிருந்தார். பரீட்சித்து பார்த்த போது குழந்தைக்கு காயம் எதுவும் படவில்லை; எப்போதும் போல் உற்சாகமாகவே இருந்தான். தாயார், வேலைக்காரன் இருவரும் ஆச்சரியம் அடைந்தனர். கவலைப்பட்ட தாயார் மறுபடியும் மகனை அடிப்பட்டது பற்றி விசாரித்தார். அதற்கு அந்த பையன், "நம் பாபா என்னை பிடித்து கீழே விட்டு விட்டு மறைந்து விட்டார்" என பதில் கூறினான்.

இதைக் கேட்ட வீட்டில் பெரியோர்களும், அருகில் உள்ளவர்களும் அதிசயப் பட்டனர். அவர்கள் ஸ்ரீ பாபா அடிக்கடி சொல்வதை நினைவுக் கொண்டனர். அதாவது, "நான் உங்கள் பின்னே இருப்பேன்; உங்களுடன் இருப்பேன்; உங்கள் கண் முன் வீட்டில் இருப்பேன். நான் உங்களை எப்பொழுதும் ரட்சிப்பேன்". அவர்கள் ஒருவருக்கொருவர், "ஸ்ரீ பாபா தன் சத்தியத்தை காப்பாற்றுகிறார். நம் கண் முன்னேயே ஏதும் அறியா பாலகனை இறப்பின் பிடியிலிருந்து காப்பாற்றியிருக்கிறார். நாம் எல்லாம் மிகவும் புண்ணியம் செய்திருக்கிறோம்" என பேசிக் கொண்டனர். இவ்வாறு ஸ்ரீ ஸாயி ரட்சிக்கும் தன் திட்டத்தை இந்நிகழ்ச்சியில் காண்பித்து எல்லோரையும் புளகாங்கித படுத்தினார்.

மூன்றாவது அத்தியாயம் முற்று பெற்றது.

மறுபடியும் பூஜை செய்ய வேண்டும். ஒரு தேங்காயோ, பழமோ நைவேத்யமாக படைத்து விட்டு ஆரத்தி எடுக்க வேண்டும். கதை தொடரும்.

# ஸ்ரீ ஸத்ய ஸாயி விரத பூஜை - பகுதி 4D

## ஸ்வாமியின் தெய்வீக கதை - அத்தியாயம் - நான்கு

### அத்யாத்மிக சீக்க்ஷா காண்டம்



**பகவானின் ஆன்மீக கட்டுபாடு**

**ஸர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய ஸாயி விரத கதை:**

வேதங்களில் போற்றப்படும் பரப்ரஹ்மன், உருவத்திற்கும் குணங்களுக்கும் அப்பாற்ப்பட்டவர் (அவ்யக்தா, நிர்குணா) ஒப்புயர்வற்ற பகவான் ஸ்ரீ சத்ய ஸாயி பாபா கலியுகத்தில் துக்கங்களை நீக்கி சுகங்களை அளிக்க வந்துள்ளார்.

பாரத கலாச்சாரத்தின் உயர்ந்த பண்புகளை மறந்து, நன்மை தீமைகளைப் பகுத்தறியும் புத்தி இல்லாமல், கடந்த காலம் அல்லது

எதிர் காலத்தைப் பற்றி சிந்தனையே இல்லாமல் திசை மாறி செல்லும் உலகமாக மாறி வருகின்றது. சனாதன தர்மத்தை மறந்து வரும் யுகத்தில், பகவான் பாபா உண்மையை எடுத்துரைக்கவும், ஆன்மீக பாதையில் செல்லவும் வழி வகுக்கின்றார்.

ஆடம்பரமும், செல்வமும் தான் எல்லையற்ற இன்பத்தை கொடுத்து, முக்தியை அடைய வழி வகுக்கும் என்ற தப்பான எண்ணம் இருக்கின்றது. இந்த அக்ஞானத்தில் மூழ்கி அதர்மமான செயல்களையும், அன்யாயமான அக்ரமமான காரியங்களையும் செய்துக் கொண்டு வாழ்க்கையைப் பயனற்றதாக வீணடிக்கின்றோம்.

பாரத கலாச்சாரத்தின் உயர்ந்த பண்புகளான சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை - இவைகளை எடுத்துக்காட்டுகள் மூலம் தெளிவுபடுத்த பகவான் அன்றாட செயல்படுகிறார்.

வர்ணாஷ்ரமாவின் விதிமுறைகளை (நான்கு வர்ணங்களும் நான்கு ஆஷ்ரமங்களும்) எடுத்துச் சொல்லி, சனாதன தர்மத்தை காக்கும் பணியில் ஈடுபட்டு, வேதங்களின் சாரம்சத்தை விவரிக்க பகவான் ஒவ்வொரு நாளும் தன் செயல்களால் உலகத்திற்கு எடுத்துரைக்கிறார். அமைதி, மகிழ்ச்சி, ஒற்றுமையை மேம்படுத்தி எல்லா மக்களும் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பது தான் பகவானின் குறிக்கோள்.

பகவத் கீதையின் சாரம்சமே, அதர்மத்தை ஒழித்து, தர்மத்தை காப்பது தான். ராமாவதாரத்தில், தீய சக்தியான ராவணனை ராமர் அழித்தார். ராமாயணத்தில் துளசிதாசர், சனாதன தர்மத்தின் விதிமுறைகளை எப்படி ராமர் கடைப்பிடித்துள்ளார் என்பதை விவரித்துள்ளார்.

கிருஷ்ணாவதாரத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் கோபிகளுக்கு ஆன்மீகத்தை தெளிவாக எடுத்துரைத்தார்.

கலியுகத்தில் பகவான் பாபாவின் அவதாரம் வித்தியாசமானது. ராஜ்ஜியம் ஒன்றும் இல்லை ஆனால் உலகத்திற்கே சக்கரவர்த்தி. ஆயுதங்கள் ஒன்றும் இல்லை ஆனால் வெற்றி அவருக்கே. எளிமை மிகுந்த ஒளிமயமுள்ள அவதாரமாக திகழ்கின்றார். அன்பும், அருளும், கருணையையும் வாரி வழங்குகிறார். ஞானத்தின் ஒளியாகவும், சகல நற்குணங்களுக்கு அதிபதியாகவும், அழகான புன்சிரிப்புடனும் வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்பதை செயலால் வாழ்ந்து காண்பிக்கிறார். பகவானின் பவித்ரமான நாமத்தை ஸ்மரணம் செய்தால், துக்கங்கள் எல்லாம் அழிந்து, சுகங்கள் வந்தடையும்.

பிரபஞ்சத்தில் இருக்கும் அத்தனை ஜீவ ராசிகளையும் வேறுபாடு இல்லாமல் சம த்ரிஷ்டியுடன் காப்பாற்றி வருகிறார். பகவான் உண்மையின் திருவுருவம். ஆதியும் அவரே, அந்தமும் அவரே. மொத்தத்தில் எல்லாமே அவர்தான். அவர் கற்றுக் கொடுக்கும் லட்சியங்கள் பக்தி, ஞானம், வைராக்கியம் என பல. பக்தியின் அடிப்படையில் வெவ்வேறு நாட்டு மக்களை ஒன்று சேர்க்கின்றார். ஆயிரக் கணக்கான மக்களின் ஆசையைப் பூர்த்தி செய்கின்றார். எந்த மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவரவர் மதத்தை பின்பற்றி வாழ்வில் உயர வேண்டும் என்று சர்வ தர்ம கோட்பாட்டை உலகிற்கே பறைசாற்றியுள்ளார்.

சத்யம் என்னுடைய பிரசாரம், தர்மம் என்னுடைய ஆதாரம், சாந்தி என்னுடைய ஸ்வபாவம், பிரேமை என்னுடைய ஸ்வரூபம் என்று சொல்லி, ஏதாவது ஒன்றை கடைப்பிடியுங்கள் என்று எடுத்துரைக்கிறார்.

இன்றைய சமுதாயம், தர்மத்தின் ஆணிவேர்களாக போற்றப்படும் நற்குணம், ஒழுக்கம், நீதி, அறம், பொறுமை, பண்பு போன்ற உயர்ந்த நெறிகளிலிருந்து விலகியே செல்கின்றது.

பகவான் பக்தியை மேம்படுத்தி, உலக அமைதிக்காக மாநாடுகள் நடத்தி, பங்கேற்பவர்களை அவரே தேர்ந்தெடுக்கிறார். ஒழுக்கம் மேலோங்கி இருப்பதற்கும், மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கும் சேவைகள் ஆற்றி வருகிறார்.

ஜாதி, மதம், மொழி வேறுபாடு இல்லாமல், ஆயிரக்கணக்கான தெய்வீக நிறுவனங்கள் வெவ்வேறு நாடுகளில் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஸ்ரீ சத்ய சாயி சேவா சங்கம் அல்லது சமாஜம் என்ற பெயரில் நடத்துகின்றார்கள். இந்த நிறுவனங்களின் முக்கியமான குறிக்கோள் என்னவென்றால் எல்லா மனிதர்களையும் சமமாக நடத்தி, ஒழுக்க நெறிகளுடன் செயல்பட வேண்டும் என்பது தான்.

எளிமை, உண்மை, தான தர்மம் செய்தல்,வீம்பாட்டம் இல்லாமல் வாழ்தல், தன்னடக்கம், தூய்மையான உள்ளம் என்ற நற்குணங்களோடு செயல்படுவது தான் பாரத பண்பாட்டிற்கு பெருமை.

ஒவ்வொரு வீடும், அதில் இருப்போரும் சுத்தமாகவும், தூய்மையாகவும் இருக்க வேண்டும். உண்மையை பேசி நல்ல பண்புகளோடு வாழ வேண்டும். தீவிரமாக சாதனை செய்தால் தான் உண்மையான வாழ்க்கையை கடைப்பிடிக்க முடியும். வைராக்கியம் என்ற ஒரு பண்பை வளர்த்துக் கொள்ள ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும்.

சாயி நிறுவனங்களில் பொறாமைக்கு இடமில்லை. ஒற்றுமையாக செயல்பட வேண்டும். பகவான் வலியுறுத்தும் சேவை தான் மிகவும் முக்கியமானது. மற்றவர்களுக்கு தொண்டு செய்வதின் மூலமே நமக்குள் இருக்கும் பகவானை உணர முடியும்.

ஒவ்வொருவரும் காலையில் சீக்கிரமாக எழுந்து ப்ரணவ மந்திரமான ஓம்காரத்தை ஜபித்த பிறகு தான் நாளை தொடங்க வேண்டும். எந்த காரியத்தை செய்தாலும் அன்பும், பக்தியும்

நிறைந்திருக்க வேண்டும். மன உறுதியும், வேலையை நன்றாக செய்ய திறனும் கொடுப்பதற்கு பகவானை பிரார்த்திக்க வேண்டும். உறங்கும் முன், கோபம், பொறாமை அல்லது கர்வத்தோடு ஏதாவது காரியங்களைச் செய்திருந்தால், தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்க வேண்டும்.

பகவானின் நடவடிக்கைகளில் முக்கியமானது ஒன்று நகர சங்கீர்த்தனம். ப்ரஹ்ம முஹுர்த்தத்தில் எழுந்து பகவானின் பெயரை எல்லோரும் கேட்கும் படி சொல்லி நாளை ஆரம்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் இதைக் கடைப்பிடிக்க வேண்டும். பகவானின் நாம சங்கீர்தனமும், பகவத் குணங்களை பாடுவதும் முக்கியமான ஸ்தானம் பெற்றுள்ளன. அவர் நாமத்தை எக்காலமும் ஸ்மரணம் செய்தால், சுற்று சூழ்நிலைக்கும் நல்லது உண்டாகும். எல்லா மக்களும் ஒரு இடத்தில் கூடி, ப்ரணவ மந்திரத்தை ஜபித்து சுப்ரபாதம் பாட வேண்டும். பிறகு பஜனைகள் பாடிக் கொண்டே ஐந்திலிருந்து ஏழு மணி வரை நகரத்தை வலம் வர வேண்டும். ராகம், பாவம் (BHAAVAM), தாளத்தோடு பாட வேண்டும். பக்க வாத்தியங்கள் பயன்படுத்தலாம்.

ஸ்ரீ சத்ய சாயி சத்சங்கம் என்ற பெயரிலும் நிறுவனங்கள் உள்ளன. இங்கு தியானம், ஜபம் மற்றும் தெய்வீக புத்தகங்களை படித்து அதைப் பற்றி ஆலோசனை செய்வதும் உண்டு.

பகவான் இந்த விதிமுறைகளை எல்லா மக்களும் கடைப்பிடித்தால் உலகத்தில் ஒற்றுமையும், அமைதியும் உண்டாகும் என்று கூறுகிறார். உண்மைக்கு கட்டுப்பட்டு தர்மத்தை நிலைநாட்டினால் பகவானின் அனுக்ரஹம் எல்லோருக்கும் கிட்டும். உலகில் உள்ள வெவ்வேறு நாடுகளில் இருக்கும் மக்கள் புட்டபர்த்திக்கு செல்ல ஆசைப்படுகிறார்கள். சாட்ஷாத் சச்சிதானந்த பரமாத்மா மூர்த்தியே அவர்தான்.

அவர் நாமத்தை நம்பிக்கையுடன் உச்சரித்து அவருடன் ஒன்றிவிட்டால் பிறப்பதின் குறிக்கோள் முடிந்து விடும். ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் ஆகிய மூன்று சக்திகளையும் கொண்டவர் பகவான். அவரை முழுக்க நம்புவது, நேருக்கு நேர் பார்ப்பது, பகவானாகவே ஆவது ஆகிய மூன்றும் மனித சமூகத்தின் உரிமைகள். அவரும் நாமும் ஒன்று என்பதை தெள்ளத் தெளிவாக கூறுகின்றார்.

நம் நாட்டிலும், உலகிலும் சாந்தியும், சமாதானமும் மலர அவர் திரு பாத கமலங்களை பிரார்த்தனை செய்து ஒற்றுமையாக வாழ்வோம்.

# ஸ்ரீ சத்ய சாயி பாபா விரத பூஜை - பகுதி 4E

## பகவானின் தெய்வீகமான கதை

### அத்தியாயம் 5 - போத காண்டம் - பகவானின் உபநிஷதம்



**சர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி விரத கதை:**

ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அன்பும் இரக்கமும் கடலின் ஆழத்தைப் போன்றது. பரிபூர்ண அவதாரமான பாபா எல்லாவற்றிலும் நிறைந்துள்ளார். அன்னையும், தந்தையுமாய்த் திகழ்ந்து, ஆதியும், அந்தமும் இல்லாத பரப்ரஹ்மனின் ஸ்வரூபமாய் விளங்குகிறார். எல்லாம் அறிந்த பகவான் மூன்று குணங்களையும், ஆயகலைகள் அறுபத்தி நான்கையும் தன்னுள் அடக்கியுள்ளார். பகவானின்

மகிமைகளை ஆயிரம் தலைகள் கொண்ட(ஆதிசேஷன்) எண்ணற்ற சர்ப்பங்களால் கூட எடுத்துரைக்க முடியாது. கேட்கக் கேட்க தெவிட்டாத இன்பமாய் பகவானின் புனிதமான கதைகள் விளங்குகின்றன. அவரின் ஒவ்வொரு அசைவும் பார்ப்பவர்களின் மனதில் எண்ணற்ற மகிழ்ச்சியைத் தூண்டுகின்றன. சிவராத்திரி அன்று திரண்டிருக்கும் ஆயிரக் கணக்கான பக்தர்களுக்கு அருளாசி வழங்கிக் கொண்டிருக்கையில், தன் நாபிகமலத்திலிருந்து ஆத்ம லிங்கங்களை சிருஷ்டிப்பார். அவ்வாறு தோன்றிய லிங்கங்கள் வெவ்வேறு உருவங்கள் கொண்டன (சாலிக்ராமம், ஸ்படிக லிங்கம், ஜ்யோதிர் லிங்கம், ஸ்வர்ண லிங்கம்). பகவானின் இந்த திரு லீலைகள் வேறு எந்த ஒரு அவதாரத்திலும் இடம் பெறவில்லை. இந்த அவதாரத்தின் மகத்துவத்தை யாராலும் அளவிட முடியாது. அவரின் திருவாயிலிருந்து வரும் இனிமையான சொற்களைக் கேட்டு பல கோடி பக்தர்கள் தங்களையே மறந்து ஆனந்தத்தில் மூழ்கினர். பகவானின் ஒவ்வொரு அசைவும் உலகின் நலனுக்காகவே அமைந்துள்ளது. உயர்ந்த குறிகோள்கள் கொண்ட பல்வேறு கல்விக் கூடங்களை அவர் நிறுவினார். இக்கல்வி நிறுவனங்களில் ஆண், பெண் இரு பாலரும் தங்கள் மனம் போனபடி பழகுவதைக் காண முடியாது. இக்குழந்தைகள் ஆழ்ந்த ஆன்மீக சிந்தனையுடனும், நல்ல பழக்க வழக்கங்களுடனும், கடவுளிடம் பக்தியுடனும் நடந்து கொள்வது பாரத நாட்டின் பாரம்பரியத்தை எடுத்துரைக்கின்றது. இக்கல்வி கூடங்களில் பயிலும் மாணவ மாணவிகள் சத்யம், தர்மம், சாந்தி மற்றும் அன்பு போன்ற நற்குணங்களைக் கற்றுக் கொள்வதால், எதிர்காலத்தில் இச் சமுதாயத்திற்கு வழிக்காட்டியாகத் திகழ்ந்து, நல்ல பல மாறுதல்களை விளைவிக்கிறார்கள்.

பாபாவின் அருளுரையை இப்பொழுது நாம் கேட்கலாம்.

நீங்கள் அனைவரும் மனித நேயத்தின் தத்துவத்தை நன்கு புரிந்து அதற்கேற்றார் போல் வாழ்க்கையை வாழ வேண்டும். அனைவரும்

இந்த உலகத்தின் ஆதாரமாக விளங்கி கொண்டிருக்கும் பரம்பொருளின் தன்மையை நன்கு உணர வேண்டும். விருப்பத்திர்கேற்றார் போல் வாழ்க்கையை வாழ்வது மனித தர்மம் ஆகாது. புராண இதிகாசங்களும், சாஸ்திரங்களும் மனிதன் வாழ்விற்கு ஏற்ற நெறிமுறைகளை எடுத்துரைக்கின்றன. இந்த தேகமும், தேகத்தை இயக்கும் சக்தியும் ஒரே பரம்பொருளின் அம்சம். இதே அம்சமானது பிரபஞ்ச சராச்சரத்தையும் வியாபித்துள்ளது. இந்த உண்மையை அறிந்து கொள்ள மனிதனுக்கு இடைவிடாத முயற்சி இன்றியமையாததாகும். மனிதனும் இறைவனும் ஒன்று என்னும் அனுபவத்தை மனிதனால் நிச்சியம் உணர முடியும். இந்த அனுபவத்தினால் வரும் ஆனந்தம் அனைத்திற்கும் அப்பாற்பட்டு விளங்குவதோடு மட்டுமல்லாமல், ஐம்புலன்களின் சக்திக்கு அப்பாற்பட்டும் விளங்குகிறது. இந்த உயர்ந்த பதவிக்குச் செல்வது ஒவ்வொரு தனி மனிதனுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமையாகும்.

தன்னை சுற்றியுள்ளோர்களின் மனதில் புத்துணர்வையும் வீரத்தையும் தூண்ட மனிதனால் நிச்சியம் முடியும். ஒரு மனிதன் தன் மேல் வைத்திருக்கும் தன்னம்பிக்கை முக்கியம் என்று இந்த புண்ணிய பூமியான பாரதம் கற்பிக்கின்றது. ஆனால் இன்று நடைமுறையிலுள்ள கல்விமுறையானது இந்த மாபெரும் தத்துவத்திற்குப் பிரச்சனைகள் விளைவிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்த கல்வி முறையை மாற்றி அமைப்பது உடனடியான தேவையாகும். நேர்வழியில் வாழ்க்கையை வாழ்வதே முக்கியமாக கருதும் மாற்று சிந்தனை, புதிய கல்வி முறையில் எதிரொலிக்க வேண்டும். மற்றவர்களுக்கு நன்மை பயக்கும் வேலைகளில் ஈடுபடுவதே உயர்ந்த தர்மமாகும். அன்னை, தந்தை, குரு மற்றும் விருந்தாளிகள் ஆகிய அனைவரும் கடவுளின் அம்சங்கள் என்ற கருத்து மனதளவிலும், நடைமுறையிலும் போற்றப்பட வேண்டும்.

இதுவே ஒட்டுமொத்த சமுதாயத்தின் மகிழ்ச்சிக்கு உறுதுணையாக அமையும். கல்வி என்பது பிழைக்க மட்டுமே பயன்படும் கருவி ஆகாது. கல்வி என்பது வாழ்க்கையின் வேராகும். உலகியலை மட்டுமே கற்றுக் கொடுக்கும் கல்வி அமைதியை விளைவிக்காது. நவீன கலாசாரமானது மனிதனின் மனதைக் களங்கப்படுத்தி மூளையை வெறும் களிமண்ணாக மாற்றி விடுகின்றது. இதனால் மனிதன் தன் பாதை மாறி தீய பல காரியங்களில் ஈடுபட தூண்டப் படுகிறான். இன்று நடைமுறையிலுள்ள கல்வி ஒரு மாணவனின் ஒட்டுமொத்த வளர்ச்சியாக கருதப்படும். உடல்ரீதியான, மனரீதியான, ஆன்மீகரீதியான வளர்ச்சிக்கு வழி செய்வதில்லை. உடல்ரீதியான உலகியல் சுகங்களுக்கு மட்டுமே ஆசைப்பட்டு, மனிதன் தன் மகத்தான மனித நேயத்தை இழக்கிறான்.

ஆன்மீக வளர்ச்சியின் உச்சத்தை அடைய தேவையான வழிமுறைகளை வரையறுத்துள்ள ஒரே நாடு நம் புனிதமான பாரத நாடு. எனவே தான் இந்த நாட்டில் பிறந்த அனைவருக்கும் ஆன்மீக பாதையில் நாட்டமும், முன்னேற்றம் அடைய தூண்டுதலும் இயற்கையாகவே அதிகம் இருக்கிறது. இந்த உலகியல் கல்வியானது எதற்கும் பயன்படாது. உங்களுக்கு இந்த உலகியல் அறிவும், தொழில்நுட்பமும் நன்கு தெரிந்திருக்கலாம். ஆனால் உள்ளுணர்வு சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு விடை தெரியாமல் போய்விடுகின்றது. உதாரணத்திற்கு நீங்கள் யார்? எங்கிருந்து வந்தீர்கள்? எங்கு சென்று கொண்டிருக்கிறீர்கள்? என்றவைக்கு பதில் தெரியாமலே வாழ்வது எவ்வளவு பெரிய முட்டாள்தனம். இந்த உண்மையை அறிந்து கொள்ள நாம் நம் வாழ்க்கையில் எந்த ஒரு முயற்சியையும் எடுக்காமல் இருப்பது அதை விட கேவலம். ஆத்ம விஸ்வாசம், தன்னம்பிக்கை, இதுவே வாழ்க்கையின் அடிவேராகும். பக்தியே இதன் பூக்களாகவும், ஆனந்தமே கனிகளாகவும், நல்ல நடத்தையே பழரசமாகவும் திகழ்கின்றன. இந்த உயர்ந்த சனாதன தர்மத்தையும், உங்களின் இன்றியமையாத மனித நேயத்தையும் பேணிக் காக்கும் பொறுப்பு உங்கள் அனைவரிடத்திலும் இருக்கின்றது.

இது போன்ற பொன்னான வார்த்தைகளின் மூலம் அங்கு கூடியிருந்த இளைஞர்களின் மனதில் தெளிவாக நல்ல விஷயங்களைப் புகுத்தினார் பாபா. இந்த அறிவுரைகள் மாணவர்களுக்கு மட்டுமல்லாது, பல்வேறு துறைகளில் இருப்பவர்களுக்கும் வழங்கினார். பகவானின் இந்த அன்பை அனைவரும் எந்த ஒரு பாகுபாடின்றி பெற்றனர். எல்லோரின் இதயத்திலும் இறை நம்பிக்கை என்னும் விதையை விதைத்து, ஆன்மீக தாகத்தை ஏற்படுத்தி, சேவை என்னும் ஆசையைத் தூண்டி, தன் அன்பை நீர்போல் ஊற்றி இந்த மரங்களை வளரச் செய்கிறார்.

பல்வேறு சங்கங்கள் மூலமும், மண்டலிகள் மூலமும் பகவான் தன் போதனைகளைக் கொண்டு செல்கிறார். தர்மத்தை நிலை நிறுத்தி, நல்ல பண்புகளை புகட்டுவதே அவதாரத்தின் முக்கியமான குறிக்கோள். தன்னுடைய செயற்திட்டத்தை நிறைவேற்ற பகவான் மகாராஷ்டிர மாநிலத் தலை நகரமான மும்பையைத் தேர்வு செய்தார். அவ்விடத்திற்கு தர்மக்ஷேத்திரம் என்று பெயரிட்டார். பகவானின் நல்லாசியுடன் இந்த திவ்ய காரியத்தை பக்தர்கள் மேற்கொண்டனர். குறிக்கப்பட்ட தேதிக்கு முன்னரே அனைத்துப் பணிகளும் நிறைவு பெற்றன. இவ்வேகத்தை கண்டு அனைவரும் வியப்படைந்தனர். அந்தக் கட்டிடத்திற்கு சத்திய தீபம் என்று பகவான் பெயரிட்டார். இவ்விடத்தில் ஒரு தீபத்தின் புகைப்படம் உள்ளது. இந்த தீபமானது பல்வேறு சிந்தனைகளுடன் வரும் மனதை ஒரு நிலைப்படுத்தி ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட உறுதுணையாய் திகழ்கிறது. அறியாமையிலிருந்து ஞானத்திற்கு செல்வதைக் குறிக்கின்றது.

மனிதர்கள் நிறைய துன்பங்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலையில் இந்த சத்திய தீபமானது மன திடமும், சக்தியும் அளிக்கின்றது. இந்த பிரார்த்தனை மண்டபத்தின் பின் புறத்தில் பளிங்கு கற்களால் அமைக்கப்பட்ட படிகட்டுகள் இருக்கின்றன. நடுவில் காணப்படும் தூணானது பதினெட்டு இதழ் கொண்ட தாமரை வடிவில்

அமைந்துள்ளது. இது பகவானின் இருப்பிடம். இந்தத் திருக்கோவிலில் பகவான் தர்ம போதனை, தர்ம ஸ்தாபனம் மற்றும் தர்ம பிரதிஷ்டை ஆகிய மூன்று நற்செயல்களையும் நடத்தி வருகிறார். பாரத நாட்டிலுள்ள எண்ணற்ற பக்தர்கள் தங்கள் அன்பையும், நன்றிகளையும் பகவானின் திவ்ய பாத கமலங்களுக்கு சமர்ப்பணம் செய்ய இவ்விடத்திற்கு வந்து செல்கின்றனர்.

ஒவ்வொரு தனி மனிதனும் ஆன்மீக சாதனையை தொடங்க வேண்டும். இந்த முயற்சியில் அயராது ஈடுப்பட்டால் தான் பலனானது கிட்டும். இறைவன் அனைத்து ஜீவ ராசிகளிலும் இருக்கின்றார். அதை நாம் உணர முயற்சி செய்தல் வேண்டும். ஒரு முறை பகவான் கூறியதாவது, "இந்த தர்மக்ஷேத்ரத்தின் மூலம் எனது போதனைகள் உலகெங்கும் பரவும்" என்றுதான். இந்த உலகத்தில் பார்க்கும் துயரத்திலிருந்து விடுதலை பெற மனிதன் மூன்று விஷயங்களை வளர்த்து கொள்ள வேண்டும். அவை இடைவிடாத கடவுள் சிந்தனை, காரியத்தின் பலனை அவரிடம் சமர்ப்பித்தல் மற்றும் அனைத்து சந்தர்ப்ப சூழ்நிலையிலும் அவரிடம் நம்பிக்கை செலுத்துவது. இவ்வாறாக பந்தங்களிலிருந்து விடுதலை பெறுவதே மனிதனின் குறிக்கோளாக அமைய வேண்டும். ஆனால், மனிதன் உலகியல் சம்பந்தமான சுகங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் தருகிறான். தர்மத்தை விளைவிக்கும் நிலமாக ஒருவரின் இதயம் திகழ்கிறது. எனவே தான் நம் இதயத்தை தர்மக்ஷேத்ரம் என்றும் குருக்ஷேத்ரம் என்றும் அழைக்கின்றோம். எனவே ஒவ்வொருவரின் கடமை தர்மத்தைக் கடைப்பிடிப்பது. இதைத் தவிர்த்து, தீய வேலைகளில் ஈடுபட்டு இந்த மகத்தான வாய்ப்பை வீணடிப்பது பலவீனம். இதுவே பகவத் கீதையின் சாராம்சமாகும். பகவத் கீதையின் முதல் ஸ்லோகத்தில், "இந்த தர்மேக்ஷத்ரமாகிய குருக்ஷேத்ரத்தில் என் மக்களும், பாண்டவர்களும் என்ன செய்கிறார்கள்? என்ற கேள்வியை திருதுராஷ்டிரன் எழுப்பினார். மேலே கூறப்பட்டுள்ள "என் மக்கள்" என்ற பதமானது அஹங்காரத்தையும், கர்வத்தையும் குறிக்கின்றது.

இதுவே ராஜச, தாமச குணங்களின் சேர்க்கை. "பாண்டவர்கள்" என்ற பதமானது தூய்மையைக் குறிக்கின்றது. இது சத்வ குணத்தை எடுத்துரைக்கிறது. நம் வாழ்க்கையில் இந்த ஸத்வ, ராஜச, தாமச குணங்களிடையே இடைவிடாது போர் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், இறுதியில் வெற்றி ஸத்வ குணத்திற்கே கிட்டும். ஒரு நதியானது கடலிலிருந்து பிறக்கிறது. இடையில் எத்தனை தடைகள் வந்தாலும் இறுதியில் நதி கடலை சென்றடைகின்றது. இதைப் போல், மனிதனும் தன் பிறப்பிடமான ஆத்மாவை நோக்கியே பயணிக்க வேண்டும். இந்தத் தூய்மையான ஸத்வ குணத்தைப் போற்றி காப்போருக்கு இறைவனின் அருளானது கிட்டும்."

பக்தர்கள் தங்கும் விடுதி, பிரார்த்தனை மண்டபம், பஜனை மண்டபம், அச்சகம் போன்றவை இந்த தர்மக்ஷேத்ரத்தில் உள்ளன. வெளிநாடுகளிலிருந்து வரும் பக்தர்களுக்குச் சிறப்பு ஏற்பாடுகள் உள்ளன. அவர்கள் பகவானின் போதனையை நன்கு கவனித்து, ஆன்மீக வளர்ச்சியில் அதிக முயற்சி செலுத்துகின்றனர். எனவே இவர்களை நன்கு உபசரித்து வசதிகள் செய்து வர சர்வதேச மையம் அமைக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் நடைபெறும் பஜனைகளைத் தவிர, அனைத்து முக்கிய பண்டிகைகளும் கொண்டாடப்படுகின்றன. இந்தப் புனிதக் க்ஷேத்ரத்தை ஆரம்பித்த பொழுது பகவான் தன் திருக் கரங்களால் அணையா தீபத்தை ஏற்றி வைத்தார். இந்த தீபமானது அனைத்து மனித குலத்திற்கும் வழிக்காட்டியாக திகழ்கின்றது. இந்த விளக்கிலிருந்து பல பக்தர்கள் தங்கள் விளக்குகளை ஏற்றி, தங்கள் ஊர்களுக்குக் கொண்டு செல்வது வழக்கம். பகவான் பரிந்துரைத்துள்ள ஜோதி தியானம் செய்யும் கூடங்களில் இந்த விளக்குகள் மிகவும் பலன் தருகின்றன. இதற்கான முழு அனுமதியை பகவானே வழங்கினார். ஒவ்வொரு பக்தரின் இதயமும் தர்மக்ஷேத்ரமாக, பிரசாந்தி நிலையமாக, சனாதன தர்மத்தின் ஆணிவேராக அமைய பகவான் தன் அருளாசி வழங்கினார். மதங்களுக்கு அப்பாற்பட்ட வேதங்களைப் பேணிக் காக்க வேண்டும் என்பதில் பகவான் உறுதியாக இருந்தார்.

ஆதியும் அந்தமும் இல்லா பரம்பொருளே நம் பகவான். அவரின் சக்தி வரையறைக்கு அப்பாற்பட்டது அவரின் மகிமைகளும், லீலைகளும். "அணுவை விடச் சிறியதாக, அண்டத்தை விடப் பெரியதாக" விளங்குபவரே நம் பகவான். அவரின் மகத்துவம் இந்த சராசரத்தையும் தாண்டிச் செல்லக் கூடியது. முழு நம்பிக்கை, அன்பு மற்றும் பக்தி ஆகிய மூன்று குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைப் படி, பக்தர்கள் இந்த சத்யா சாயி விரதத்தைக் கடைப்பிடித்தால் தங்கள் பிரார்த்தனைகள் நிறைவேறும். அனைத்து பக்தர்களும் ஒன்று கூடி பகவான் பெருமைப்படும் அளவிற்கு நற்காரியங்களைச் செய்து அன்பையும் ஞானத்தையும் பெற நான் பிரார்த்திக்கிறேன்.

# ஸ்ரீ சத்ய சாயி பாபா விரத பூஜை - பகுதி 4E

## பகவானின் தெய்வீகமான கதை

### அத்தியாயம் 5 - போத காண்டம் - பகவானின் உபநிஷதம்



**சர்வ தேவதாதீத ஸ்வரூப ஸ்ரீ சத்ய சாயி விரத கதை:**

ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அன்பும் இரக்கமும் கடலின் ஆழத்தைப் போன்றது. பரிபூர்ண அவதாரமான பாபா எல்லாவற்றிலும் நிறைந்துள்ளார். அன்னையும், தந்தையுமாய்த் திகழ்ந்து, ஆதியும், அந்தமும் இல்லாத பரப்ரஹ்மனின் ஸ்வரூபமாய் விளங்குகிறார். எல்லாம் அறிந்த பகவான் மூன்று குணங்களையும், ஆயகலைகள் அறுபத்தி நான்கையும் தன்னுள் அடக்கியுள்ளார். பகவானின்

மகிமைகளை ஆயிரம் தலைகள் கொண்ட(ஆதிசேஷன்) எண்ணற்ற சர்ப்பங்களால் கூட எடுத்துரைக்க முடியாது. கேட்கக் கேட்க தெவிட்டாத இன்பமாய் பகவானின் புனிதமான கதைகள் விளங்குகின்றன. அவரின் ஒவ்வொரு அசைவும் பார்ப்பவர்களின் மனதில் எண்ணற்ற மகிழ்ச்சியைத் தூண்டுகின்றன. சிவராத்திரி அன்று திரண்டிருக்கும் ஆயிரக் கணக்கான பக்தர்களுக்கு அருளாசி வழங்கிக் கொண்டிருக்கையில், தன் நாபிகமலத்திலிருந்து ஆத்ம லிங்கங்களை சிருஷ்டிப்பார். அவ்வாறு தோன்றிய லிங்கங்கள் வெவ்வேறு உருவங்கள் கொண்டன (சாலிக்ராமம், ஸ்படிக லிங்கம், ஜ்யோதிர் லிங்கம், ஸ்வர்ண லிங்கம்). பகவானின் இந்த திரு லீலைகள் வேறு எந்த ஒரு அவதாரத்திலும் இடம் பெறவில்லை. இந்த அவதாரத்தின் மகத்துவத்தை யாராலும் அளவிட முடியாது. அவரின் திருவாயிலிருந்து வரும் இனிமையான சொற்களைக் கேட்டு பல கோடி பக்தர்கள் தங்களையே மறந்து ஆனந்தத்தில் மூழ்கினர். பகவானின் ஒவ்வொரு அசைவும் உலகின் நலனுக்காகவே அமைந்துள்ளது. உயர்ந்த குறிகோள்கள் கொண்ட பல்வேறு கல்விக் கூடங்களை அவர் நிறுவினார். இக்கல்வி நிறுவனங்களில் ஆண், பெண் இரு பாலரும் தங்கள் மனம் போனபடி பழகுவதைக் காண முடியாது. இக்குழந்தைகள் ஆழ்ந்த ஆன்மீக சிந்தனையுடனும், நல்ல பழக்க வழக்கங்களுடனும், கடவுளிடம் பக்தியுடனும் நடந்து கொள்வது பாரத நாட்டின் பாரம்பரியத்தை எடுத்துரைக்கின்றது. இக்கல்வி கூடங்களில் பயிலும் மாணவ மாணவிகள் சத்யம், தர்மம், சாந்தி மற்றும் அன்பு போன்ற நற்குணங்களைக் கற்றுக் கொள்வதால், எதிர்காலத்தில் இச் சமுதாயத்திற்கு வழிக்காட்டியாகத் திகழ்ந்து, நல்ல பல மாறுதல்களை விளைவிக்கிறார்கள்.

பாபாவின் அருளுரையை இப்பொழுது நாம் கேட்கலாம்.

நீங்கள் அனைவரும் மனித நேயத்தின் தத்துவத்தை நன்கு புரிந்து அதற்கேற்றார் போல் வாழ்க்கையை வாழ வேண்டும். அனைவரும்

இந்த உலகத்தின் ஆதாரமாக விளங்கி கொண்டிருக்கும் பரம்பொருளின் தன்மையை நன்கு உணர வேண்டும். விருப்பத்திர்கேற்றார் போல் வாழ்க்கையை வாழ்வது மனித தர்மம் ஆகாது. புராண இதிகாசங்களும், சாஸ்திரங்களும் மனிதன் வாழ்விற்கு ஏற்ற நெறிமுறைகளை எடுத்துரைக்கின்றன. இந்த தேகமும், தேகத்தை இயக்கும் சக்தியும் ஒரே பரம்பொருளின் அம்சம். இதே அம்சமானது பிரபஞ்ச சராச்சரத்தையும் வியாபித்துள்ளது. இந்த உண்மையை அறிந்து கொள்ள மனிதனுக்கு இடைவிடாத முயற்சி இன்றியமையாததாகும். மனிதனும் இறைவனும் ஒன்று என்னும் அனுபவத்தை மனிதனால் நிச்சியம் உணர முடியும். இந்த அனுபவத்தினால் வரும் ஆனந்தம் அனைத்திற்கும் அப்பாற்பட்டு விளங்குவதோடு மட்டுமல்லாமல், ஐம்புலன்களின் சக்திக்கு அப்பாற்பட்டும் விளங்குகிறது. இந்த உயர்ந்த பதவிக்குச் செல்வது ஒவ்வொரு தனி மனிதனுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமையாகும்.

தன்னை சுற்றியுள்ளோர்களின் மனதில் புத்துணர்வையும் வீரத்தையும் தூண்ட மனிதனால் நிச்சியம் முடியும். ஒரு மனிதன் தன் மேல் வைத்திருக்கும் தன்னம்பிக்கை முக்கியம் என்று இந்த புண்ணிய பூமியான பாரதம் கற்பிக்கின்றது. ஆனால் இன்று நடைமுறையிலுள்ள கல்விமுறையானது இந்த மாபெரும் தத்துவத்திற்குப் பிரச்சனைகள் விளைவிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்த கல்வி முறையை மாற்றி அமைப்பது உடனடியான தேவையாகும். நேர்வழியில் வாழ்க்கையை வாழ்வதே முக்கியமாக கருதும் மாற்று சிந்தனை, புதிய கல்வி முறையில் எதிரொலிக்க வேண்டும். மற்றவர்களுக்கு நன்மை பயக்கும் வேலைகளில் ஈடுபடுவதே உயர்ந்த தர்மமாகும். அன்னை, தந்தை, குரு மற்றும் விருந்தாளிகள் ஆகிய அனைவரும் கடவுளின் அம்சங்கள் என்ற கருத்து மனதளவிலும், நடைமுறையிலும் போற்றப்பட வேண்டும்.

இதுவே ஒட்டுமொத்த சமுதாயத்தின் மகிழ்ச்சிக்கு உறுதுணையாக அமையும். கல்வி என்பது பிழைக்க மட்டுமே பயன்படும் கருவி ஆகாது. கல்வி என்பது வாழ்க்கையின் வேராகும். உலகியலை மட்டுமே கற்றுக் கொடுக்கும் கல்வி அமைதியை விளைவிக்காது. நவீன கலாசாரமானது மனிதனின் மனதைக் களங்கப்படுத்தி மூளையை வெறும் களிமண்ணாக மாற்றி விடுகின்றது. இதனால் மனிதன் தன் பாதை மாறி தீய பல காரியங்களில் ஈடுபட தூண்டப் படுகிறான். இன்று நடைமுறையிலுள்ள கல்வி ஒரு மாணவனின் ஒட்டுமொத்த வளர்ச்சியாக கருதப்படும். உடல்ரீதியான, மனரீதியான, ஆன்மீகரீதியான வளர்ச்சிக்கு வழி செய்வதில்லை. உடல்ரீதியான உலகியல் சுகங்களுக்கு மட்டுமே ஆசைப்பட்டு, மனிதன் தன் மகத்தான மனித நேயத்தை இழக்கிறான்.

ஆன்மீக வளர்ச்சியின் உச்சத்தை அடைய தேவையான வழிமுறைகளை வரையறுத்துள்ள ஒரே நாடு நம் புனிதமான பாரத நாடு. எனவே தான் இந்த நாட்டில் பிறந்த அனைவருக்கும் ஆன்மீக பாதையில் நாட்டமும், முன்னேற்றம் அடைய தூண்டுதலும் இயற்கையாகவே அதிகம் இருக்கிறது. இந்த உலகியல் கல்வியானது எதற்கும் பயன்படாது. உங்களுக்கு இந்த உலகியல் அறிவும், தொழில்நுட்பமும் நன்கு தெரிந்திருக்கலாம். ஆனால் உள்ளுணர்வு சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு விடை தெரியாமல் போய்விடுகின்றது. உதாரணத்திற்கு நீங்கள் யார்? எங்கிருந்து வந்தீர்கள்? எங்கு சென்று கொண்டிருக்கிறீர்கள்? என்றவைக்கு பதில் தெரியாமலே வாழ்வது எவ்வளவு பெரிய முட்டாள்தனம். இந்த உண்மையை அறிந்து கொள்ள நாம் நம் வாழ்க்கையில் எந்த ஒரு முயற்சியையும் எடுக்காமல் இருப்பது அதை விட கேவலம். ஆத்ம விஸ்வாசம், தன்னம்பிக்கை, இதுவே வாழ்க்கையின் அடிவேராகும். பக்தியே இதன் பூக்களாகவும், ஆனந்தமே கனிகளாகவும், நல்ல நடத்தையே பழரசமாகவும் திகழ்கின்றன. இந்த உயர்ந்த சனாதன தர்மத்தையும், உங்களின் இன்றியமையாத மனித நேயத்தையும் பேணிக் காக்கும் பொறுப்பு உங்கள் அனைவரிடத்திலும் இருக்கின்றது.

இது போன்ற பொன்னான வார்த்தைகளின் மூலம் அங்கு கூடியிருந்த இளைஞர்களின் மனதில் தெளிவாக நல்ல விஷயங்களைப் புகுத்தினார் பாபா. இந்த அறிவுரைகள் மாணவர்களுக்கு மட்டுமல்லாது, பல்வேறு துறைகளில் இருப்பவர்களுக்கும் வழங்கினார். பகவானின் இந்த அன்பை அனைவரும் எந்த ஒரு பாகுபாடின்றி பெற்றனர். எல்லோரின் இதயத்திலும் இறை நம்பிக்கை என்னும் விதையை விதைத்து, ஆன்மீக தாகத்தை ஏற்படுத்தி, சேவை என்னும் ஆசையைத் தூண்டி, தன் அன்பை நீர்போல் ஊற்றி இந்த மரங்களை வளரச் செய்கிறார்.

பல்வேறு சங்கங்கள் மூலமும், மண்டலிகள் மூலமும் பகவான் தன் போதனைகளைக் கொண்டு செல்கிறார். தர்மத்தை நிலை நிறுத்தி, நல்ல பண்புகளை புகட்டுவதே அவதாரத்தின் முக்கியமான குறிக்கோள். தன்னுடைய செயற்திட்டத்தை நிறைவேற்ற பகவான் மகாராஷ்டிர மாநிலத் தலை நகரமான மும்பையைத் தேர்வு செய்தார். அவ்விடத்திற்கு தர்மக்ஷேத்திரம் என்று பெயரிட்டார். பகவானின் நல்லாசியுடன் இந்த திவ்ய காரியத்தை பக்தர்கள் மேற்கொண்டனர். குறிக்கப்பட்ட தேதிக்கு முன்னரே அனைத்துப் பணிகளும் நிறைவு பெற்றன. இவ்வேகத்தை கண்டு அனைவரும் வியப்படைந்தனர். அந்தக் கட்டிடத்திற்கு சத்திய தீபம் என்று பகவான் பெயரிட்டார். இவ்விடத்தில் ஒரு தீபத்தின் புகைப்படம் உள்ளது. இந்த தீபமானது பல்வேறு சிந்தனைகளுடன் வரும் மனதை ஒரு நிலைப்படுத்தி ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட உறுதுணையாய் திகழ்கிறது. அறியாமையிலிருந்து ஞானத்திற்கு செல்வதைக் குறிக்கின்றது.

மனிதர்கள் நிறைய துன்பங்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலையில் இந்த சத்திய தீபமானது மன திடமும், சக்தியும் அளிக்கின்றது. இந்த பிரார்த்தனை மண்டபத்தின் பின் புறத்தில் பளிங்கு கற்களால் அமைக்கப்பட்ட படிகட்டுகள் இருக்கின்றன. நடுவில் காணப்படும் தூணானது பதினெட்டு இதழ் கொண்ட தாமரை வடிவில்

அமைந்துள்ளது. இது பகவானின் இருப்பிடம். இந்தத் திருக்கோவிலில் பகவான் தர்ம போதனை, தர்ம ஸ்தாபனம் மற்றும் தர்ம பிரதிஷ்டை ஆகிய மூன்று நற்செயல்களையும் நடத்தி வருகிறார். பாரத நாட்டிலுள்ள எண்ணற்ற பக்தர்கள் தங்கள் அன்பையும், நன்றிகளையும் பகவானின் திவ்ய பாத கமலங்களுக்கு சமர்ப்பணம் செய்ய இவ்விடத்திற்கு வந்து செல்கின்றனர்.

ஒவ்வொரு தனி மனிதனும் ஆன்மீக சாதனையை தொடங்க வேண்டும். இந்த முயற்சியில் அயராது ஈடுப்பட்டால் தான் பலனானது கிட்டும். இறைவன் அனைத்து ஜீவ ராசிகளிலும் இருக்கின்றார். அதை நாம் உணர முயற்சி செய்தல் வேண்டும். ஒரு முறை பகவான் கூறியதாவது, "இந்த தர்மக்ஷேத்ரத்தின் மூலம் எனது போதனைகள் உலகெங்கும் பரவும்" என்றுதான். இந்த உலகத்தில் பார்க்கும் துயரத்திலிருந்து விடுதலை பெற மனிதன் மூன்று விஷயங்களை வளர்த்து கொள்ள வேண்டும். அவை இடைவிடாத கடவுள் சிந்தனை, காரியத்தின் பலனை அவரிடம் சமர்ப்பித்தல் மற்றும் அனைத்து சந்தர்ப்ப சூழ்நிலையிலும் அவரிடம் நம்பிக்கை செலுத்துவது. இவ்வாறாக பந்தங்களிலிருந்து விடுதலை பெறுவதே மனிதனின் குறிக்கோளாக அமைய வேண்டும். ஆனால், மனிதன் உலகியல் சம்பந்தமான சுகங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் தருகிறான். தர்மத்தை விளைவிக்கும் நிலமாக ஒருவரின் இதயம் திகழ்கிறது. எனவே தான் நம் இதயத்தை தர்மக்ஷேத்ரம் என்றும் குருக்ஷேத்ரம் என்றும் அழைக்கின்றோம். எனவே ஒவ்வொருவரின் கடமை தர்மத்தைக் கடைப்பிடிப்பது. இதைத் தவிர்த்து, தீய வேலைகளில் ஈடுபட்டு இந்த மகத்தான வாய்ப்பை வீணடிப்பது பலவீனம். இதுவே பகவத் கீதையின் சாராம்சமாகும். பகவத் கீதையின் முதல் ஸ்லோகத்தில், "இந்த தர்மேக்ஷத்ரமாகிய குருக்ஷேத்ரத்தில் என் மக்களும், பாண்டவர்களும் என்ன செய்கிறார்கள்? என்ற கேள்வியை திருதுராஷ்டிரன் எழுப்பினார். மேலே கூறப்பட்டுள்ள "என் மக்கள்" என்ற பதமானது அஹங்காரத்தையும், கர்வத்தையும் குறிக்கின்றது.

இதுவே ராஜச, தாமச குணங்களின் சேர்க்கை. "பாண்டவர்கள்" என்ற பதமானது தூய்மையைக் குறிக்கின்றது. இது சத்வ குணத்தை எடுத்துரைக்கிறது. நம் வாழ்க்கையில் இந்த ஸத்வ, ராஜச, தாமச குணங்களிடையே இடைவிடாது போர் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், இறுதியில் வெற்றி ஸத்வ குணத்திற்கே கிட்டும். ஒரு நதியானது கடலிலிருந்து பிறக்கிறது. இடையில் எத்தனை தடைகள் வந்தாலும் இறுதியில் நதி கடலை சென்றடைகின்றது. இதைப் போல், மனிதனும் தன் பிறப்பிடமான ஆத்மாவை நோக்கியே பயணிக்க வேண்டும். இந்தத் தூய்மையான ஸத்வ குணத்தைப் போற்றி காப்போருக்கு இறைவனின் அருளானது கிட்டும்."

பக்தர்கள் தங்கும் விடுதி, பிரார்த்தனை மண்டபம், பஜனை மண்டபம், அச்சகம் போன்றவை இந்த தர்மக்ஷேத்ரத்தில் உள்ளன. வெளிநாடுகளிலிருந்து வரும் பக்தர்களுக்குச் சிறப்பு ஏற்பாடுகள் உள்ளன. அவர்கள் பகவானின் போதனையை நன்கு கவனித்து, ஆன்மீக வளர்ச்சியில் அதிக முயற்சி செலுத்துகின்றனர். எனவே இவர்களை நன்கு உபசரித்து வசதிகள் செய்து வர சர்வதேச மையம் அமைக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் நடைபெறும் பஜனைகளைத் தவிர, அனைத்து முக்கிய பண்டிகைகளும் கொண்டாடப்படுகின்றன. இந்தப் புனிதக் க்ஷேத்ரத்தை ஆரம்பித்த பொழுது பகவான் தன் திருக் கரங்களால் அணையா தீபத்தை ஏற்றி வைத்தார். இந்த தீபமானது அனைத்து மனித குலத்திற்கும் வழிக்காட்டியாக திகழ்கின்றது. இந்த விளக்கிலிருந்து பல பக்தர்கள் தங்கள் விளக்குகளை ஏற்றி, தங்கள் ஊர்களுக்குக் கொண்டு செல்வது வழக்கம். பகவான் பரிந்துரைத்துள்ள ஜோதி தியானம் செய்யும் கூடங்களில் இந்த விளக்குகள் மிகவும் பலன் தருகின்றன. இதற்கான முழு அனுமதியை பகவானே வழங்கினார். ஒவ்வொரு பக்தரின் இதயமும் தர்மக்ஷேத்ரமாக, பிரசாந்தி நிலையமாக, சனாதன தர்மத்தின் ஆணிவேராக அமைய பகவான் தன் அருளாசி வழங்கினார். மதங்களுக்கு அப்பாற்பட்ட வேதங்களைப் பேணிக் காக்க வேண்டும் என்பதில் பகவான் உறுதியாக இருந்தார்.

ஆதியும் அந்தமும் இல்லா பரம்பொருளே நம் பகவான். அவரின் சக்தி வரையறைக்கு அப்பாற்பட்டது அவரின் மகிமைகளும், லீலைகளும். "அணுவை விடச் சிறியதாக, அண்டத்தை விடப் பெரியதாக" விளங்குபவரே நம் பகவான். அவரின் மகத்துவம் இந்த சராசரத்தையும் தாண்டிச் செல்லக் கூடியது. முழு நம்பிக்கை, அன்பு மற்றும் பக்தி ஆகிய மூன்று குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைப் படி, பக்தர்கள் இந்த சத்யா சாயி விரதத்தைக் கடைப்பிடித்தால் தங்கள் பிரார்த்தனைகள் நிறைவேறும். அனைத்து பக்தர்களும் ஒன்று கூடி பகவான் பெருமைப்படும் அளவிற்கு நற்காரியங்களைச் செய்து அன்பையும் ஞானத்தையும் பெற நான் பிரார்த்திக்கிறேன்.